உ

கடவுள் துணை

செந்தமிழ்.

தொகுதி-௩௬.] பிரமாதி௵ ஐப்பசி௴ [பகுதி-௧௨.

Vol. 36 October—November 1939. No. 12.

கம்பராமாயணசாரம்

[௪௪௫-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இராவணன் மகோதரன் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளல்.

இவ்வாறு மகோதரன் கூறக்கேட்டு, இராவணன், தளர்ந்த மனம் கிளர்ந்தமனமாக, அவனைநோக்கிப் 'பேரறிவாளனே! (யான் சம்மானமாகக் கொடுக்கும் என்) செல்வமெல்லாம் பெறுதற்கு உரியாய். உனக்கு என்பாலுள்ள அன்புக்கு எல்லையில்லை. நான் கடைப்பிடித்துச்செய்யக்கடவதான உறுதிச்செயலையுரைத்தாய்' என்று கூறினான். 'இறுதியே இயைவதானால் இடையொன்றால் தடையுண்டாமோ'*

அவன் கும்பகருணனை அழைத்துவரும்படி கிங்கரர் நால்வருக்குக் கட்டளையிடல்

கும்பகருணனை அழைத்துவரும்படி இராவணன் தன் பக்கத்தில் நின்ற ஏவலர் நால்வருக்குக் கட்டளையிட்டான். அவர்கள்

* இப்படலம் 42. ('ஒருவனுக்கு ஊழின்படி) சாவு நேர்வதாயிருந்தால் (அவ்வூழுக்கும் சாவுக்கும்) இடையே (குறுக்கிட்டுவந்து தடுக்கமுயலும், மாலியவான்முயற்சிபோன்ற) எதனாலும் (சாவுநேராதபடி தடுக்கக்கூடிய) தடையுண்டாகாது' என்றவாறு.

உறங்கிக்கொண்டிருந்த கும்பகருணனை அணுகித் 'துயிலுணர்வாயாக! துயிலுணர்வாயாக' (என்று கூவியதை அவன் கேளானாய் உறங்க) அவன் தலையிலும் காதிலும் கைகொண்டு தட்டியும் (எழானாக,) இரும்புத்தடிகொண்டு தாக்கினார்கள். அவன் அதனாலும் விழியாமையைக் கண்டு வெகுண்டு பின்வருமாறு கூறுகின்றார்கள்.

ஏவலர் கோபக்கூற்று.

62 உறங்கு கின்ற கும்ப கன்ன உங்கள் மாய[1] வாழ்வெலாம்
இறங்கு கின்ற[2] தின்று காணெ ழுந்தி ராயெ ழுந்திராய்
கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே
உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்.

கொண்டுகூட்டு: 'உறங்குகின்ற கும்பகன்ன(னே), உங்கள் மாய வாழ்வு எ(ல்)லாம் இன்று (தோல்வியால்) இறங்குகின்றது. (இதனைக்) காண்(பாயாக'. எழுந்திராய்! எழுந்திராய்! கறங்குபோல்(பவரும்) விற்பிடித்த(வருமான) காலதூதர் கையிலே (என்றும்) உறங்குவாய்! உறங்குவாய்! இனி (என்றும் எழாத படுக்கையிற்) கிடந்து உறங்குவாய்!

பொருள்: 'தூங்குகின்ற கும்பகருணனே! வஞ்சனை(யால் நீங்கள் அடைந்த) வாழ்வெல்லாம் (முதற்போர்புரிதல் நடந்த) இன்று (உன் தமையன், இராமனால் தோல்வியுற்றதனால்) தாழ்வடையத் தொடங்கிவிட்டது. இதனைக் காண்பாயாக. (காணுதற்குக் கண்விழித்து) எழுந்திருப்பாயாக! எழுந்திருப்பாயாக! (இராக்கதருயிர்களைக் கவரப் போர்க்களமெங்குஞ் சுற்றுதலால்) காற்றாடிபோன்றவரும் விற்பிடித்தவருமான (இராமலக்குமணரான) காலதூதர்கையினால் (ஏவும் அம்புகளால் என்றும் விழியாத உறக்கம்) உறங்குவாய்! உறங்குவாய்! (இதற்குமுன் படுக்கையிற் படுத்துறங்குதலும் படுக்கைவிட்டெழுதலும்போலன்றி) இனி (என்றென்றும் எழாத படுக்கையிற்) கிடந்து உறங்குவாய்! (செத்த நீ திரும்பிப் பிழைக்கமாட்டாய் என்றபடி).

கும்பம் - குடம். கன்னம் - கர்ணம் - கருணம் - காது. கும்பகருணன் - குடம்போலுங் காதுடையவன். கறங்கு (-காற்றாடி) போல்(கின்றவரும்) அ(ந்த) வில்(லைப்) பிடித்த(வருமான) காலதூதர் எனக் கொள்க. 'காற்றாடி போலத் திரிகின்ற வில்லைப்பிடித்த யமதூதர்' என்பது முந்திய உரை.

இவ்வாறு இராவணனுக்கும் அவன் குடும்பத்தார்க்கும் விரோதமாகப் பரிகசித்துக்கூறிய ஏவலர், இராக்கதராயிருத்தல் இயற்கையன்றாதலால், தேவராயிருக்கவேண்டுமென்பது ஊகிக்கத் தக்கது. சுந்தரகாண்டம் அட்சயகுமாரன்வதைப்படலத்தில், அவன்சாவை இராவணனிடம் சென்று தெரிவித்த அசோகவன காவலரான தேவர்கள், அச்சாவுபற்றித் தம் நெஞ்சுள் மகிழ்ந்தாராயினும் அழுதார்களென்பது, — இங்கே காதுகேளாது தூங்கும் கும்பகருணனன்றி யாருமில்லாத இடத்தில் பரிகாசவார்த்தைகள் கூறிக் கும்பகருணனை யெழுப்பமுயன்றவர் தேவர் என்ற ஊகத்துக்கு அரண்செய்கின்றது.

பாடபேதம்: [1] தானை. [2] இறந்துபோகுது.

['என்றும் முடிவில்லாததா(யிருக்குமென்று யாவரும் நம்பி)யிருந்த இராக்கதரது இன்பவாழ்வு கெட்டொழிவதற்குக் காரணமாக, உன் தமையன் (சீதையைக் கவரும்) தீமையைச் செய்தான். இன்று நீ போரில் இறப்பது திண்ணம். (அந்தப் போருக்குச் செல்ல எழுந்திடாமல்) ஏன் இன்னும் உறங்குகின்றாய்' என்று அந்தக் *கிங்கரர் அலைத்தலைத்து எழுப்பியும் அவன் உறக்கமொழியாமையைக் கண்டு, அவர்கள் இராவணனிடம்போய், 'எங்களால் உன் தம்பியை எழுப்ப இயலவில்லை' என்றார்கள். அவன், 'யானைகளும் சிங்கங்களும் மேலேறி மிதித்துச்செல்லச்செய்து எழுப்புங்கள்' என்று அவர்களோடு ஆயிரக்கணக்கான அம்மிருகங்களை அனுப்பினான். 'அவைகளாலும் அவன் அசையவில்லை' யென்று அவைகளோடு திரும்பிவந்த அந்த நான்குமல்லரும் சொல்ல,

* கிங்கரர் - (மற்போர்வல்ல) ஏவலர்.

ஆயிரம் மல்லரை 'உங்கள் சேனையோடு சென்று எழுப்புங்கள்' என்று அனுப்பினான். அவர்கள், கும்பகருணன் மாளிகைக்குச் சென்று, அதன் வாயிற்கதவைத் திறக்கவே, அவனுடைய மூச்சுக் காற்று அவர்களை மாறிமாறி வெளியே தள்ளுதலும் உள்ளே யிழுத்தலும் செய்ய, அவர்கள் சிதறிவிடாதபடி ஒருவர்கையை ஒருவர் பற்றிக்கொண்டு தம் முழுவலிமையையும் செலுத்தி (மூச்சுக்காற்றை யெதிர்த்துச்சென்று, ஒருவாறு) உள்ளே புகுந்தார்கள்; புகுந்தவர்கள், அவன் பெருவாயையும் மூக்கையும் கண்டு பீதியடைந்து, யாதுசெய்வதென்று சிந்தித்துச், சங்கு தாரை முதலிய ஊதுகருவிகளைக் கொண்டு அவன் காதுக்குள்ளே ஊதிப் பெருத்த முழக்கமுண்டாக்கியும் தண்டாயுதம் சம்மட்டி முதலிய தாக்குங்கருவிகளால் தலையிலும் தாடையிலும் மார்பிலும் தாக்கியும் எழுப்ப முடியாதுபோனமையை இராவணனிடம் தெரிவித்தார்கள். அவன், 'குதிரைப்படைகளைக்கொண்டு எழுப்புக' என, ஆயிரம் குதிரைவீரர்சென்று கும்பகருணன்மார்பு (வையாளிவீதியாக, அதன்) மேல் (குதிரைகளைத் தாவிப்பாய்ந்து வேகமாக ஓடச் செய்து) சாரிவந்தார்கள். அச்செயல், அவனுக்குத் தொடைதட்டுதல்போலத் தூக்கத்தை அதிகப்படுத்தியது. அந்தக் குதிரை வீரர்கள் திரும்பி இராவணனிடம் சென்று 'குதிரைகள் கால்களோய்ந்தன, அவைகளைச் செலுத்திய எங்கள் கைகளும் ஓய்ந்தன. வேறு எழுப்பும் உபாயம் ஏதேனும் இருந்தால், இயம்புவாயாக' என்றனர். அவன், 'சூலாயுதத்தையும் மழுப்படையையும் எறிந்தாயினும் எழுப்பி அழைத்துவாருங்கள்' என ஏவ, ஆயிரம் அரக்க வீரர் சென்று கும்பகருணனுடைய இரண்டுகன்னத்திலும் உலக்கைகள்கொண்டு அடிக்க, அவன் அசைந்து எழுந்திருந்தான். அவன் உட்கார்ந்திருந்த உயரம் இராவணன் நின்ற உயரமாயிருந்தது. சிரசு விண்முகட்டைப்பிடிக்க, தேகம், திசையனைத்தையும் அடைக்க, அவன் எழுந்துநின்றபோது, உலகளந்த (திரிவிக்கிரமனான) திருமாலை யொத்தான்.

கும்பகருணன் பசி தாகந் தீர்த்துக்கொள்ளல்.

உறக்கம் தீர்ந்த கும்பகருணன், பசியும் தாகமும் தீர, ஓர் ஆறுவண்டி சோறும் பலநூறு குடம் கள்ளும் உட்கொண்டான்.* ஆயிரத்திருநூறு எருமைக்கடாக்களின்மாமிசத்தைத் தின்றான்.

கும்பகருணன் இராவணனைக் காணுதல்.

பணியாளர், 'உன் தமயன் உன்னை அழைக்கின்றான்' என்று கூற, அவன், இராவணனிடம் சென்று, சாட்டாங்கமாகக் கீழே விழுந்து மலைகிடந்ததுபோல வணங்கினான். மலை, கால் முளைக்கப் பெற்று நடந்துவந்து வணங்கினாற்போன்ற தம்பியைத் தமயன் கை கிளைக்கப்பெற்ற மலைபோலத் தழுவினான்.

இராவணன் கும்பகருணனுக்குப் போர்க்கோலம்புனைதல்.

இராவணன், கும்பகருணனை மாமிசமும் இரத்தமும் கள்ளும் (உபசாரச் சிற்றுண்டியாக) உட்கொள்ளச்செய்து, கருங்கடல்மேல் வெண்ணுரை பொலிந்தாற்போல, (கருமலையை வெண்மேகம் சூழ்ந்துவிளங்கினாற்போல) அவனுக்கு வெண்பட்டாடை யுடுத்துத் தனக்கு (இராவணனுக்கு) இந்திரன் தோற்றோடியபோது அவனுடைய வெள்ளானை நெற்றியினின்று விழுந்த நெற்றிப்பட்டத்தை வீரபட்டமாக நெற்றியிலே கட்டித் தெய்வமணங் கமழும் செஞ் சந்தனக்குழம்பைத் தேகத்தின்மீது பூசித் தவமியற்றிச் சிவனிடத்துப் பெற்றிருந்த கவசத்தைப் பூட்டினான்.

'மாற்றாரை மாய்ப்பாய்'யென, இராவணன், கும்பகருணனுக்குக் கூறுதல்.

கும்பகருணன், 'என் இந்தக்கோலம் புனைந்தாய்' என, இராவணன், 'மானுடர் (இருவர்) வானரசேனையோடு நமதுநகரை முற்றுகைசெய்திருக்கிறார்கள். நீ அவர்கள் உயிரை உண்ணப் போவாயாக' என்றான்.]

---

* ஆறு நூறு சகடத் தடிசிலும்
நூறு நூறு குடங்க(ள்)ளும் நுங்கினான்.

சகடம் - வண்டி. அடிசில் - சோறு. நுங்கல் - உண்ணல்.

கும்பகருணன் கூற்று.

63 ஆனதோ வெஞ்சம மலகில் கற்புடைச்
சானகி துயரினந் தவிர்ந்த தில்லையோ
வானமும் வையமும் வளர்ந்த[1] வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றுங் காலமே.

கொண்டுகூட்டு: *வெம் சமம் ஆனதோ! இன்னும் அலகு இல் கற்பு உடை(ய) சானகி துயர் தவிர்ந்ததில்லையோ! வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ் போனதோ! பொன்றுங்காலம் புகுந்ததோ!*

பொருள்: *'(ஆ! நான் அஞ்சியபடியே,) போர் உண்டாகி விட்டதா! ஐயோ! இன்னும் சீதை (சிறைத்) துயரம் தீரவில்லையா! மண்ணுலகமும் விண்ணுலகமும் (நிரம்ப) வளர்ந்த (உன்) பெரும்புகழ் (மாய்ந்து) போனதா! (இராக்கதரெல்லாரும்) இறக்குங்காலம் வந்துவிட்டதா.' (என்று ஏக்கத்தோடு கும்பகருணன் கூறினான்.)*

வெம்சமம் - கொடிய போர். அலகு இல் - அளவில்லாத. வான்புகழ் - பெருங்கீர்த்தி. பொன்றுதல் - சாதல். மூன்றும்அடி முற்றுமோனை.

இப்பாட்டு, கும்பகருணனுடைய அத்தியந்த துக்கத்தைக் கூறுகின்றது. கூறும் முறையினால், நாம் உணரும் துக்கம் உணருமளவு உரைக்கமுடியாததாயுள்ளது. 'அண்ணா, சீதையைக் கவர்ந்தது, தீயசெயல்! அது, அந்தோ! செய்தாய்விட்டது. அவளை விட்டுவிடுதலே இப்போது செய்யக்கடவது' என்று மாலியவானும் விபீடணனும் நானும் போதித்ததைப் பொருட்படுத்தினாயில்லை. ஆதலால் விபீடணன் உன்னைவிட்டு விலகிவிட்டான். உனது பிடிவாதத்தால், போர்விளையுமென்று அஞ்சினேன். ஆயினும், பின்பு, உனக்கு நற்புத்தி பிறக்கலாமென்ற நம்பிக்கையோடு உறங்கலுற்றேன். அந்தோ! நான் நம்பியபடியன்றி, அஞ்சியபடி சண்டை உண்டாகிவிட்டதே! அது உண்டாகாதபடி சீதை சிறைவிடப்பட்டு அவள் துன்பம் நீங்கவில்லையே! உலகமெல்லாம் பரவி

வளர்ந்துகொண்டிருந்த உன்புகழ் ஒழிந்துவிட்டதே! எல்லாச் செல்வங்களோடும் இனிதுவாழ்ந்த இராக்கதரெல்லாருக்கும் இறக்குங்காலம் பிறக்கலாயிற்றே! என்ற கருத்துப்பட, இராவணனுக்குக் கும்பகருணன் கூறினனென, இப்பாட்டின் கருத்தை ஒருவாறு விளக்கலாம்.

பாடபேதம்; [1] நிறைந்த.

['திரிலோகங்களையுஞ் செயித்தாலும், சீதைதேகத்தைத் தீண்டுதல்செல்லாதது போல், ஸ்ரீ ராமனைச் செயித்தலும் செல்லாததே. (சீதையை இராமனிடம் கொடாமையால்) உன்வீரத்தாற் பறித்திருந்த விண்ணுலகத்தையும் வெற்றியையும் இந்திரனுக்குக் கொடுத்தாயானாய்! உன்னை உன் குலத்தோடு கெடுத்தாயானாய்! தேவர்களைச் சிறைவிடுத்தாயானாய்! உனக்கு வலிமையும் வாழ்வும் கொடுக்கும் தருமத்தை அகற்றினாய்! அவைகளைக் கெடுக்கும் அதருமத்தைப் பற்றினாய்! எதிரிகள் எண்ணுவது சொல்வது செய்வது எல்லாம் நல்லவை. நாம் எண்ணுவது வஞ்சகம், சொல்லுவது பொய், செய்வது தீமையாக, நமது திரிகரணச் செயல்களும் தீயவைகளாயிருக்கின்றன. ஆதலால், அவர்களோடு நாம் போர்புரிவோமானால், தப்பிப்பிழைக்கமாட்டோம். காலினால் கருங்கடலைக்கடந்த குரங்கும், சிறைநீங்காத சீதையும், வாலியின் வயிரமார்பினையுருவியோடிய அம்பும் (நமக்கு யமனாக) இருக்க, நாமும் இருக்கின்றோம். (நம்மை முடிப்பதற்கு) யாது குறையிருக்கின்றது? இந்நிலைமையில், நான் உனக்கு உணர்த்தவேண்டியது ஒன்று உள்ளது. அதனை உணர்ந்து ஏற்றுக்கொள்வாயானால், நன்மையுண்டாம்; மறுப்பாயானால், மாள்வாய்.

அதைக் கூறுகிறேன் கேள்; சீதையைவிட்டு இராமனை வணங்கி உன் தம்பி விபீடணனுடன் உறவுபூணுதல் உனக்குப் பிழைக்கும் வழியாம். இது, உனக்கு ஏற்காததெனில், செய்யத்தக்கது வேறொன்றிருக்கிறது. அதையும் சொல்லுகிறேன். பகுதி பகுதியாகப் படைகளை அனுப்பி, அவைகள் ஒன்றன்பின் ஒன்றாக ஒழியக்

கண்டு, வருந்தியிருந்து வாடுதல், அறிவாளிகள்செயலன்று. நம் படைவலிமுழுதையும் பகைவர்மீது ஒருசேரச் செலுத்துவதே செய்யத்தக்கது' என்றான்.

இராவணன் கும்பகருணனைக் கோபித்தல்.

'நான் உன்னை அழைத்தது, இனி யாது நேருமென்று தெரிந்து கொள்ளுதற்காகவன்று (நீ,சோதிடனல்லை,) "இவ்வாறு மனிதரைக் கொல்வாயாக" என்று எனக்கு யோசனைகூறுதற்கு மந்திரியுமல்லை. நீ பயப்பட்டனை. உன் வீரம் பாழ்பட்டது. யுத்தத்துக்குரிய வலிமை ஒழிந்தவனாயினாய். மதுவும் மாமிசமும் வயிறுநிறைய உண்டாய். (இனி வேண்டுவதொன்றே. அது உறக்கமே) இரவும் பகலும் உறங்கப்போ' என்று கும்பகருணன் மனம்வருந்தும்படி கூறி, இராவணன், பின்னும் கூறுகின்றான்.]

64 மானுட ரிருவரை வணங்கி மற்றுமக்
கூனுடைக் குரங்கையும்[1] கும்பிட் டுய்தொழில்
ஊனுடை யும்பிக்கு முனக்கு மேகடன்
யானது புரிகிலே[2] னெழுக போகென்றான்.[3]

கொண்டுகூட்டு: 'மானுடர் இருவரை வணங்கி மற்றும் அ(ந்த)க்கூன் உடை(ய) குரங்கையும் கும்பிட்டு உய்தொழில், ஊனம் உடை(ய) உம்பிக்கும் உனக்குமே கடன். யான் அது புரிகிலேன். எழுக, போக' என்றான் (இராவணன்)

பொருள்: (கேவலம்) மனிதரான (இராம லக்குமணர்) இருவரை(அடி)வணங்கி அம்மட்டோடமையாமல் (சுக்கிரீவனென்னும்) கூனற்குரங்கையும் கும்பிட்டு உயிர்வாழும் (அடிமைத்) தொழில், ஊனமுடைய உன் தம்பிக்கும் உனக்குமே (பொருத்தமான சீவனோபாய) முறையாம். நான் அந்த (ஈன)த் தொழிலைச் செய்யமாட்டேன். (இனி, இங்கே இராதே), எழுந்துபோவாயாக' (என்றான் இராவணன்).

மற்றும் - பின்னும். 'உடை', 'உடைய' என்பதன் தொகுத்தல். உய்தல் - உயிர்வாழ்தல். 'தஞ்சம்' என்பது, 'அம்' கெடத் 'தஞ்சு' (அது, 'தஞ்சென உணர்ந்திலை' கம்பரா. யுத். மந்திர. 16) எனத் தொக்காற்போல, 'ஊனம்' என்பது, 'ஊன்' எனத் தொக்கது. முந்திய அடியில் 'கூனுடை' என்றதற் கியைய, 'ஊனமுடைய' எனற்பாலதை 'ஊனுடை' என்றார். ஊனம் - குறை. 'ஊனுடை' யென்பதற்கு 'ஊனேயே விரும்புதலையுடைய' [புகழை விரும்பாத] என்பது முந்திய உரை. 'போக என்றான்' என்பது 'போகென்றான்' எனத் தொக்கது.

குரங்கையும் என்பதில் உம்மை இழிவுசிறப்பும்மை. 'அது நினைக்கிலேன்' என்றபாடத்துக்கு, அச்செயலை நினைக்கவேமாட்டேன், செய்வேனோ?' என்றும், 'அது முடிக்கிலேன்' என்ற பாடத்துக்கு, 'அச் செயலை நிறைவேற்ற 'மாட்டேன்' அல்லது 'அச்செயலை (உங்களைப்போலத் தலையணியாகத் தலையில்) முடித்து (சூட்டி)க்கொள்ளமாட்டேன்', என்றும் பொருள்கொள்க.

பாடபேதம்: [1] குரங்கினைக். [2] நினைக்கிலேன், முடிக்கிலேன். [3] எழுதி போதியால்.

[இராவணன் இவ்வாறு கூறிவிட்டுப் பக்கத்தில்நின்ற பணியாளரைநோக்கி, 'என் தேரையும் ஆயுதங்களையும் கொணர்க' "எங்குமுள்ள இராக்கதரெல்லாரும் ஒன்றுசேர்ந்து எதிரிகளோடு பொருதற்கு வருக" என்று என் கட்டளையாக எல்லாருக்கும் தெரியும்படி பறைசாற்றுக' என்று சொல்லிப் போருக்குப் புறப்படலானான்.

கும்பகருணன் கூறுதல்.

அதைக்கண்ட கும்பகருணன், அவன் பாதங்களில்வீழ்ந்து பணிந்து மன்னிப்புவேண்டிப் போருக்கு ஆயத்தமாய்ச் சூலாயுதத்தை வலக்கையிலேந்தி, 'நான் போருக்குப் போகின்றேன். அதன்முன் ஒருவார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது' என்று சொல்லலாயினான்.]

65 வென்றிவண் வருவனென் றுரைக்கி லேன்விதி
ஒன்றது[1] பிடர்பிடித் துந்து கின்றது[2]
பொன்றுவன் பொன்றினுற் பொலன்கொ டோளியை[3]
நன்றென[4] நாயக விடுதி[5] நன்றரோ.

கொண்டுகூட்டு: 'விதி ஒன்று (உள்ளது). அது (என்னைப்) பிடர் பிடித்து உந்துகின்றது. (ஆதலால்,) "வென்று இவண் வருவன்" என்று உரைக்கிலேன். பொன்றுவன்; பொன்றினுல், பொலன்கொள் தோளியை (விடுதல்) நன்று என விடு. (அது) நன்று.'

பொருள்: விதி ஒன்று (உள்ளது). அது ("சா. போ" என்று என்னைப்) பிடரியைப் பிடித்துத் தள்ளுகின்றது. (ஆதலால்,) நான் வெற்றிபெற்று இங்கே திரும்பி வருவேனென்று சொல்ல மாட்டேன். (என் சாவைப்பற்றி எனக்கு யாதொரு கவலையுமில்லை. நான் செத்தபின்பாவது, என்வார்த்தையைப் பின்பற்றி நீ இனிது வாழவேண்டுமென்பதே, என் கவலை.) நான் சாவேன்; செத்தால் (அதன்பின்பு) சீதையை (விடுதல்) நன்றென்று கருதி விடுவாயாக. (அது) நன்மை (பயப்பதாம்).

இவண் - இங்கே. உந்துதல் - தள்ளுதல். பொன்றுதல் - சாதல். பொலன்கொள் தோளி - ஆபரணம் அணிந்த தோளையுடையவள்—சீதை. நன்று - நன்மை. விடுதி - விடுவாய். அரோ ஓர் அசைச்சொல்.

'ஒன்றது' என்பதில் 'அது' என்பதைப் பகுதிப்பொருள்விகுதியாகக் கொண்டு, 'விதி ஒன்றது' என்பதற்கு (என் ஆயுட்காலத்தின் ஆதிமுதல் அந்தம்வரை இன்னின்னவை நிகழ்வனவாக: எனப் பிரமன் விதித்த விதிகளுள் இறுதியான) 'ஒரு விதி' யென்றும் பொருளுரைக்கலாம்.

பாடபேதம்: [1] நின்றது, [2] உந்திநின்றது, [3] தையலை, [4] நன்றது, நன்றிது, நன்றினி, நன்றியின், [5] விடுதல்.

['யான் பிறந்தநாள்முதல் இறந்துபோகும் இந்தநாள்வரை ஏதேனும் குற்றஞ்செய்திருந்தால் பொறுத்தருள்வாயாக. இனி உன்முகத்தில் விழிப்பதற்கில்லை. விடைபெற்றுக்கொண்டேன். போர்க்குப் போகிறேன்' என்று கும்பகருணன் புறப்பட்டான்.

அப்போது, (அவன் அவனுயிருக்கும் அதிகமாகத் தனக்கு அன்புடையவனென்பதை உணர்ந்து என்பும் உருகும் அன்புடையவனாகி, அவனுக்கு ஒருகால் சாவு நேருமோ என்று எண்ணி) இராவணன் இருபதுகண்களிலும் கண்ணீரோடு *செந்நீரும் சுரந்து ததும்பலுற்றான்.

போருக்குப் புறப்பட்ட கும்பகருணன், நகரவாயிலையடைந்தான். அவனோடு, 'போர்ப்பறை முழக்கிக்கொண்டு பெரும்படை செல்க' என இராவணன் இட்ட கட்டளைப்படி வந்த நால்வகைப் படைகளும் நடந்ததனால் உண்டாகிய தூளிகள், எழுந்து படர்ந்து விண்முகட்டைத் தூர்த்தன. அவ்வாறு தூர்த்த தூளிகளைத் துடைப்பனபோல், தேர்கள்மீது கட்டப்பட்டும் யானைகள்மீது பிடிக்கப்பெற்றும் விளங்கிய கொடிகளின் சீலைகள் ஆடலாயின. ஆயிரம் சிங்கங்களும் ஆயிரம் யானைகளும் ஆயிரம் பூதங்களும் பூட்டிய, இரத்தினங்கள் இழைத்த இரதத்தின்மீது கும்பகருணன் ஏறிச்சென்றான். அவனை இராமன் கண்டான்.

கும்பகருணனைக் கண்ட இராமன் எண்ணங்கள்.

['அதோ, காணப்படுகின்ற அபாரமான தேர், ஆதிசேடனது தலையினின்று நீங்கிய ('மாயிருஞாலம்' என்னும்) மிகப்பெரிய பூமி போல்கின்றது. அந்தப் பெருந்தேர்மீது பிரமாண்டகாத்திரத்தோடு வீற்றிருக்கும் வீரன் அந்தப் பூமிமீது பொலியும் மகாமேரு நேருகின்றான். அவனுடைய ஆகாயமளாவிய கொடியில் இனிய வீணை காணப்படாமையால், இராவணனல்லன், வெவ்விய சிங்கம் விளங்குதலால், வேறு யாவனோ!' என்று இராமன் எண்ணினான்.]

'இவன் யார்' என இராமன் விபீடணனை வினவுதல்.

66 தோளொடு தோள் செலத் தொடர்ந்து[1] நோக்குறின்
நாள்பல கழியுமா னடுவ ணின்றதோர்[2]
தாளுடை மலைகொலாஞ் சமரம் வேட்டதோர்
ஆளென வுணர்கிலேன்[3] ஞர்கொ லாமிவன்.[4]

---

* செந்நீர் - இரத்தம்.

கொண்டுகூட்டு: தோளொடு தோள்செலத் தொடர்ந்துநோக்குறின் பலநாள்கழியும். நடுவண் நின்றது, தாள் உடை(ய) ஓர்மலைகொல்! சமரம் வேட்டது ஓர் ஆளென உணர்கிலேன். இவன் ஆர்?

பொருள்: '(விபீடணா, அந்தத் தேரில் நிற்கின்ற பிரமாண்டமான உருவத்தைப் பார். நமது கண்பார்வை அதன் ஒரு) தோளொடு (தொடங்கி மறு) தோள்(வரை) செல்லும்படி பார்த்தால், (பார்த்துமுடியுமுன்) பலநாட்கள் கழிந்துவிடும் (என்று சொல்லும்படி அவ்வளவு பெரியதாக அந்தத் தேரின்) நடுவில் நிற்பது, (மேற்கூறிய தோள்களுடன்) கால்களுடையதாகிய ஒரு மலையோ? (அது தேரிலே சேனைசூழப் போர்க்களத்துக்குவந்தமையால்) போரை விரும்பியது (ஆகிய அது) ஒரு ஆளென்று (ஊகிக்கின்றேன்; ஆள் தானென்று) உணரமாட்டாதேனாயுள்ளேன். இப்படியுள்ளவன் யார்?' (கூறுவாயாக என்றான் இராமன்).

நடுவண் - நடுவில். தாள் உடை - காலுடைய. சமரம் - போர். வேட்ட - விரும்பிய. 'உணர்கிலேன்' என்பதில், 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைநிலை. 2-ஆம் அடியில் நின்ற ஆலும் 3, 4-ஆம் அடிகளில் நின்ற ஆம் இரண்டும் அசைநிலை. கொல் இரண்டும் ஐய இடைச்சொற்கள்.

'வீரரில் இப்படியிருப்பவரைக் கண்டதில்லையாதலால், இராமன் "சமரம்வேட்டதோர் ஆளென உணர்கிலேன்" என்கின்றான்'. வை. மு. கோ.

பாடபேதம்: [1] தொடர. [2] நடுவுநின்றதோர். [3] அறிகிலேன். [4] இது.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள்கழுத்தணி)

[௪௫௯-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இதுவரை சொற்குற்றங்களைக் கூறினார்; இனிப் பொருட் குற்றங்களைக் கூறுவான் எடுத்துக்கொண்டார்.

வாக்கியப்பொருட்குற்றம்.

𑌅𑌪𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍇𑌕𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌸𑌂𑌶𑌯𑌮𑌪𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌚𑍈𑌵𑌾𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌪𑌰𑍁𑌷𑌂 𑌵𑌿𑌰𑌸𑌂 𑌤𑌥𑌾 ॥ ௪௪ ॥

𑌹𑍀𑌨𑍋𑌪𑌮𑌂 𑌭𑌵𑍇𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑌧𑌿𑌕𑍋𑌪𑌮𑌮𑍇𑌵 𑌚 ।
𑌅𑌸𑌦𑍃𑌕𑍍𑌷𑍋𑌪𑌮𑌂 𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍋𑌪𑌮𑌂 𑌤𑌥𑌾 ॥ ௪௫ ॥

𑌨𑌿𑌰𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌮𑌶𑍍𑌲𑍀𑌲𑌂 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑌿𑌤𑌿 𑌷𑍋𑌡𑌶 ।
𑌉𑌕𑍍𑌤𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌜𑌾 𑌦𑍋𑌷𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

(1) அபார்த்தம் (-பிண்டப்பொருளற்றது), (2) வியர்த்தம் (-வீணானது), (3) ஏகார்த்தம் (-கூறியதுகூறல்), (4) ஸஸம்சயம் (-ஐயத்திற்கிடனாயது), (5) அபக்கிரமம் (-முறைதடுமாறியது), (6) கின்னம் (-வழக்கொடு மாறாயது), (7) அதிமாத்திரம் (-உலக நடைகடந்து மிகைபடக்கூறுதல்), (8) பருஷம் (-கடுமையானது), (9) விரஸம் (-ஸந்தர்ப்பத்திற்குமாறான சுவையுடையது), (10) ஹீனோபமம் (-இழிந்த உவமானந்தந்து கூறப்படுவது), (11) அதிகோபமம் (-மிகவுயர்ந்த உவமைதந்து கூறப்படுவது), (12) அஸதிருக்ஷோபமம் (ஒப்புமையில்லதை உவமானமாக்கிக் கூறப்படுவது), (13) அப்பிரஸித்தோபமம் (-சான்றோராட்சிவழிப்படாத உவமானத்தைத் தந்துகூறப்படுவது), (14) நிரலங்காரம் (-அணியின்றிக் கூறப்படுவது), (15) அசிலீலம் (-அருவருக்குமாறுகூறப்படுவது),

(16) விருத்தம் (-மாறுபாடானது): என்று வாக்கியப்பொருட் குற்றங்கள் பதினாருகக் கூறப்பட்டுள்ளன. அவற்றின் இலக்கணத்தைக் கூறுவேன்.

1. அபார்த்தம்.

ஸமுதாயார்த்தஶூந்யம் யத் ததபார்த்தமிதீஷ்யதே ।

தனித்தனியே பதங்களுக்குப் பொருளிருந்தும் பெருந்தொடர் முழுவதற்குமாகத் தொடர்ந்ததொரு பிண்டித்தபொருளின்றியுள்ள வாக்கியத்தை அபார்த்தமென்பர்.

உதாரணம்:—

ஜரத்கவ: கம்பலபாதுகாப்யாம்
த்வாரிஸ்திதோ காயதி மங்களாநி ।
தம் ப்ராஹ்மணீ ப்ருச்சதி புத்ரகாமா
ராஜந்! ருமாயாம் லஶுநஸ்ய கோऽர்த்த: ॥

கம்பளியும் செருப்பும் உடைய கிழவெருது வாயிலில் நின்றுகொண்டு மங்களம்பாடுகின்றது; பிள்ளைப்பேற்றைவிரும்பிய பார்ப்பனியொருத்தி (அதைநோக்கி) அரசே! உப்பளத்தில் உள்ளிப்பூண்டுக்கு யாதுபயன் என வினவுகிருள்.

எருத்துமாட்டிற்குக் கம்பளியும் செருப்பும் உடைமை பொருந்தாமையாலும், அது மங்களம்பாடுதலும் பிள்ளைப்பேற்றை விரும்பியவள் அவ்வெருத்தைநோக்கி உப்பளத்தில் உள்ளிப்பூண்டிற்குப்பயனென்னவென்று வினவலும் 'அரசே' என விளித்தலும் பொருத்தமுள்ளனவல்லவாதலாலும், இச்சுலோகம் தொடர் முழுவதற்கும் பிண்டித்ததொரு பொருளில்லாத அபார்த்தமெனப் படுவதாயிற்று.

2. வியர்த்தம்.

வ்யர்த்தமாஹுர்கதார்த்தம் யத்ர ஸ்யாந் நிஷ்ப்ரயோஜநம் ॥௪௭॥

சில சொற்களின் ஆற்றலாற் கிடைத்துள்ளபொருளையே மறித்தும் பயனின்றி வேறுசில சொற்களாற் கூறுதலை வியர்த்தம் என்பர்.

உதாரணம்:—

ஆஶிஶ்ரிதாம் ரகுவ்யாக்ரௌ
ஶரபங்காஶ்ரமம் ததஃ ।
ஜுஹாவ ஸ்வாம் தநும் வஹ்நௌ
த்ருஷ்ட்வா தௌ ராமலக்ஷ்மணௌ ॥

இரகுகுலத்துதித்த புலிபோன்றவர்கள் (-இராமலக்ஷ்மணர்கள்) சரபங்கரது ஆச்சிரமத்தை அடைந்தனர். பின்பு அந்த ராமலக்ஷ்மணர்களைக் கண்டு (அவர்) அக்கினியில் தம்முடைய சரீரத்தை ஹோமம்செய்தார்.

இங்கே, ரகுகுலப்புலிகள் என்னும் பொருளுள்ள "ரகுவ்யாக்ரௌ" என்ற சொல்லால் 'இராமலக்ஷ்மணர்' என்னும் பொருள் பெறப்பட்டிருக்கவும், மறித்தும் "ராமலக்ஷ்மணௌ" என்று அப்பொருளையே கூறியிருத்தலாலும், ஹோமம்செய்தார் என்னும் பொருளுள்ள "ஜுஹாவ" என்ற சொல்லால் ஹோமம்செய்தற்கின்றியமையாத அக்கினி என்னும் இடம் பெறலாயிருக்கவும், அப்பொருளையே மறித்தும் "வஹ்நௌ" என்ற சொல்லாலும் கூறியிருத்தலாலும், சரீரத்தை ஹோமம்செய்தாரெனவே அது தம்சரீரமென்பது பெறலாயிருக்க, மறித்தும் தம்முடையது என்னும் பொருளை "ஸ்வாம்" என்னும் சொல்லாலும் கூறுதலாலும், (இங்ஙனம் கூறுதல் வீண்கூற்றாயிருத்தலால்) இது 'வியர்த்தம்' எனப்படுவதாயிற்று.

[நூல்வழக்கில், பொருளாற்றலாற் பெறப்பட்ட பொருளைத் தெளிவின்பொருட்டுச் சொல்லாற்கூறுதல் கூறியதுகூறலாகாது; மற்று, சொல்லாற்றலாற் பெறப்பட்ட பொருளையே பிறிதுசொல் தந்துகூறுதல் வியர்த்தமெனப்படும்.]

3. ஏகார்த்தம்.

[illegible] .... ।

முன்னொருவாக்கியத்தாற் கூறிய பொருளையே ஒருவகை வேறுபாடுமின்றியே பிறிதொருவாக்கியத்தாலும் கூறுதல் ஏகார்த்தம் என்னும் குற்றமாம்.

உதாரணம்:—

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

அலங்கரிக்கப்பட்ட முராரிபுவாகிய பகவானுடைய எல்லா அங்கங்களிலும், எல்லா ஜீவராசிகளாலும் விரும்பப்பட்டவளாயுள்ள இலக்குமி (-வனப்பு), அவர்மார்பிலுள்ள இலக்குமியைக் காட்டிலும் வேறு. ஏனென்றால் அரியின் மார்பிலுள்ள இலக்குமி (வேறெல்லா ஜீவராசிகளுக்கும் தாயாதலால்) பிறரால் காதலிக்கப் பெறாதவளாவாள்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

கதவுபோல் பரந்தகன்றதும் மனத்திற்கினியதுமான திருமார்பிற் சிதேவி வீற்றிருக்கப்பெற்ற திருமாலுக்கு, எல்லா அங்கங்களிலும் பொருந்தியிருப்பவளும் எல்லாமக்களாலும் காதலிக்கப் படுபவளுமான வேறொரு சிதேவி (-வனப்பு) தோன்றினாள்.

மேற்காட்டிய இரண்டுசுலோகங்களிலும் கருத்தொன்றேயமைந்துள்ளது. ஆகையால் இத்தொடர் "ஏகார்த்தம்" எனப்படும்,

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,

ஸ்ரீ:

இராமசெயம்.

(இராமாயணத் திருப்புகழ்)

[சஅரு-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

நெடியகண பணவிகட தடமணி யலங்கிருத
வெயிறுசிறு பிறையிலொளி யிருபதைம் பதுவதன
நிறைபவன வுதரவனல் பொறிபரந் திடுநயன வுரகேசன்
நிமிர்சுடிகை மலரணையின் மழைபொருந் தியமுகிலும்
மணியுமறி கடலுமர கதநெடுங் கிரியுமென
நிகரில்வடி வழகினொடு மகுடமுங் குடதிசையில் ஒளிமேவ

அடியிணைகள் குணதிசையி லிருமடந் தையர்மடியில்
வளரவட திசைமுதுகு பொலியவிளங் கிருவிழியும்
அருள்பொழியு முகமதியு மதிலிலங் கையர்பதியை மிகநாட
அருமறைகள் பரவவரி திருவரங் கமதுறையும்
உனதுவழி யடிமையென வனுதினங் கவலையற
அசதியற மனமுருகி நினைவுறுந் தவநெறிகள் பெறுவேனோ

கொடியவனை யிருபதுகை நிருதர்தங் குலபதியை
யுடனணுகி யவனுடைய நினைவறிந் தசுரர்கிளை
குலையவொரு நொடியதனுண் முடுகியங் கதனணுகி ரகுவீரா
கொடியிடையை யவன்விடுவ திலையவன் றனதுமுடி
யொருபதற வெதிர்பதறி யுடல்பிளந் துகுகுருதி
கொடிகழுகு பருகவினி யொருவிருந் திடநினைதி யெனவோடும்

முடியசைய முகமலர மனமுகந் திடநெடிய
வொருகையடு கணைதெரிய வொருகரஞ் சிலைகுனிய
முரிபுருவ நெரியமதி யிளவன்முன் செலமுடுகு படைசூழ
முறுகுசின மெழமுறுவல் சிறிதுவந் தலவவிரு
கனகபுய புளகமெழ வுலகமெங் கணுமறிய
முரைசறைய வமரர்பதி யெனவெழுந் தருளிவரு பெருமாளே.

வீறு நாரியர் வாக்கி லேவினை
மாறு வேல்பொரு நோக்கி லேமனம்
வேறு யேவரு தாக்கி லேயிரு குழையூடே
மீதூ டாடிய தோட்டி லேமணி
வாரூ டேவளர் கோட்டி லேமுழு
வீணே யாம்விளை யாட்டி லேயிடு குறிபோலே

ஊறு மேனிகொள் கீற்றி லேநுதன்
மேலே தானிடு நீற்றி லேபழி
யோரா நீள்வர லாற்றி லேநெடு மயலாகி
ஓடா மோகப ராக்கி லேயுனை
நாடே னோர்பொறி காக்கி லேனரா
கூடே போய்விழு மாக்கி லேசம தொழியாதோ

தேறு வானவர் பார்க்க வானரர்
மேன்மே லேவினை கூர்க்க மாருதி
சீறு வேறெண வார்க்க வாரிதி வழியாகச்
சேரார் மாநகர் பாழ்க்க நாணொலி
தானே சானகி கேட்க ராவணி
சீர்போய் வாளமர் தாழ்க்க வூர்மிசை வெயிலோனும்

எறு நீள்வெயில் காட்ட வீடணன்
ஓயா தேவினை மூட்ட மோதர
னோரா மாயைகள் பூட்ட மாகுட கனனாரும்
ஈதோ வாழ்வென வீட்டை நாடிட
நேரே போர்விளை யாட்டை மேவிய
ராமா ராவண வேட்டை யாடிய பெருமாளே. (24)

பூமி யானது தனதுக னங்கெட
நோவி லாவுட லனறெற நொந்தகை
போத னாறிட யமன்விடு கண்டகர் பதநோவும்
போக மாநர கதுபுலெ ழுந்திட
வேழொ டேழ்சரி யுரையற வெங்கடல்
யோனு நீள்வினை தொலைவுற வென்பிற வியுமாளக்

காம மேமுத லறுபகை வென்றிடு
ஞான மானந னிலைவர வுன்க்ருபை
காண லாமென வுலகுதெ ளிந்திட   ஒருகாலங்
கானு லாவிய துளவொடு கங்கையும்
நாலு வேதமு மினிதும ணந்தரு
காமர் சேவடி தொழுதுவை குந்தமும்   அடைவேனோ

மாம ராதிகள் மலைகளெ றிந்தவை
தூளி யாய்விழ வயின்மழு வெங்கணை
வாள்கள் சூலமு முடுகநெ டும்பறை   நிமிர்கால
வாரி யோசையி னதிரநி ணங்குடர்
சோரி யாறிடை யொழுகம லைந்தடர்
வான ரேசரு நிசிசர ரும்பொரு   முதனாளில்

நாம நீலன தொருகையில் வெம்புற
கீழ வாசலி னிருதர்ம டிந்தபின்
நாச மாய்விடு பகைஞர்கு லைந்துயிர்   தடுமாற
நாலு வாசலும் வீரர்வ ளைந்திட
ராவ ணேசுர னினிவரு மெங்கென
நாடி யேவட திசைமிசை நின்றருள் பெருமாளே. (25)

வரிவிழி தைக்கின்ற பின்பு
மனமது சிக்கென் றழுந்த
மருவுடல் புக்கங் கிணங்கு   மடவார்தம்
வசமுறு பித்துந்தெ ளிந்து
பொருவகை யெட்டுங்க டந்து
மறுவில்கு ணத்தன்பர் தங்கள்   உறவாகித்
திருவடி யைக்கண்டு கொண்டு
மதுமலர் வர்க்கம்பொ ழிந்து
செறிபுனல் சுற்றுங்கு டந்தை   யதுபாடித்
திரைகட லிற்றுன்று கின்ற
மணவிணை யொக்கும்ப்ர பஞ்ச
செனனம றுக்குந்த வங்கள்   பெறுவேனோ

நிருதர்ப டக்கண்டு பின்பு
தெசமுகன் வெச்சென்றெ ழுந்து
நிருபனை முற்கண்டெ டதிர்ந்து தபவிசு
நிரைமலை யைக்கண்ட துண்ட
முறவொரு விற்கொண்ட டார்ந்து
நிலையனு மந்துங்கன் வந்து மபாருபோரில்

எரியுமிழ் குத்தொன்றில் வெம்பி
மருமமி சைக்கொம்பு சிந்தி
யிவனுமொர் குத்தின்க லங்க அமராடி
இருபது கைக்கொண்ட வம்பு
சிலையொடெ திர்க்கின்ற பின்றை
யிளவல்பொ ரக்கண்டு நின்ற பெருமாளே. (26)

நிலத்தை யளவிட வோபெ ருத்தவிண்
முகட்டையளவிட வோவி னைப்பெரு
நெருக்கை யளவிட வோம தித்திற முடையோர்தம்
நினைப்பை யளவிட வோது திப்பவர்
பிறப்பை யளவிட வோவொ ருத்திக
ணிறத்தை யளவிட வோதி ரைப்பகி ரதிவீறுஞ்

சலத்தை யளவிட வோம லர்த்தொர்
கரத்தை யளவிட வோக கப்பதி
தடத்தை யளவிட வோசெ ழித்திடு மறைநூல்வா
சகத்தை யளவிட வோப ணித்தலை
நடத்தை யளவிட வோம ணிக்கழல்
தரித்த திருவடி நீப டைத்தனை யருள்வாயே

இலக்கு மணன்விடு வாளி தைத்திட
வலக்கை யுறுகணை நூறி மற்றைய
இடக்கை யுறுசிலை காறி விட்டபின் ஒருவேலை
இலக்கு முறவிட மார்பு புக்கது
துளைக்க வவன்விழு போது பற்றிமு
னெடுக்க விளவலெ ழாமை யிற்பரி பவமாகி

அலக்க ணுறுபொழு தோடி மெத்தென
வெடுத்து விசைகொடு தாவி யக்கணை
யகற்றி யிடலனு மான வர்ப்ரிய மதுவீற
அருத்தி யிமையவர் பூவி றைத்திட
எடுத்த சிலையுட னில வெற்பென
அரக்கர் பதியுட னேயெ திர்த்தருள் பெருமாளே. (27)

நாகணையை விட்டுநேரில்
கோசலைக ரத்திலாகி
நாடுறுவ னத்தின்மேவி வழியூடே
நாலுமொழி வற்றபாறை
கோதமர்கி ழத்தியாக
நான்மறைம ணத்ததூளி யதுவீசிப்

பாகிரதி யுற்றவோட
மேறியொரு சித்ரகூட
பாரசிக ரத்துலாவி முறைபாலே
பாரரசு நத்திடாத
வோரிளவ லுச்சிசூடு
பாதுகைய ளித்தபாதம் அடைவேனோ

ஆகவத சக்கிரீவன்
வேகமொடு சுக்கிரீவ
னுகமுற விட்டசூல மறநூறி
ஆயிடைய ரக்கனுனு
மீடுறவெ டுக்கொணுத
வாதியையெ டுத்துநீடு தமர்மேவ

மாகரிநி றுத்துகோடு
நால்வகையி னெட்டுவேழ
மார்பினிடை குத்திமோத வலிபாரா
வாளமரு ழக்கியூடு
தாவிவரும் ருத்ரவேக
மாருதிபு யத்திலேறு பெருமாளே.. (28)

வயம்புனை சாபமு ருக்கியும்
எதிர்ந்தவள் கூனைய கற்றியு
மருங்கொடி யாருயிர் பற்றியும் அழியாதே
மகந்தனி காவன டத்தியும்
நெருங்கிய மானைம டக்கியும்
மயங்கவ ராவையு றுத்தியும் வலிசேர

அயர்ந்துபுள் வாய்பெழ வெற்றியும்
நெடுங்கடல் சூழ்பதி கட்டியும்
அழிந்தவ ராவிதி ருப்பியும் மடமாதின்
அருந்துயர் தீரவ ருட்செய்தும்
இரண்டவ தாரமு மொத்தவுன்
அரங்கவி மானம னத்தினின் மறவேனே

புயந்தனி லேறிவ டிக்கணை
துரந்துநி சாசரர் பட்டெதிர்
புறந்தர யானைய டற்பரி யுடல்வேருய்ப்
புரண்டிட வோடுதி ரக்கடல்
பரந்திட மோதியு முட்கனல்
புகைந்திட நீள்புய வெற்பிரு பதுநால

வியனசினை வாளிய கற்றியும்
உடம்பினி லீடுக ழற்றியும்
விளங்கிய மாமுடி சூட்டியும் ஒருபாகன்
விழும்படி தேரது மூக்கியும்
அசங்கத மாகவ ரக்கனை
வெறுங்கையி னோடு நொறுக்கிய பெருமாளே. (29)

கண்களே வேல்களோ வெஞ்ச
ரங்களோ வாள்களோ வஞ்ச
னங்களோ காலனோ நஞ்சின் வடிவேயோ
கஞ்சமோ நீலமோ தங்கு
கெண்டையோ சேல்களோ கண்ட
கண்கொள்மா ரீசமோ பெண்கள் முகமீதே

பண்கொள்மா மாரனுல் கொஞ்சு
இன்றதே தோவெனு நின்று
பங்கமாய் மோகமாய் நெஞ்சு தடுமாறிப்
பண்டனுய் வீணனுய் வெம்பி
நொந்தநாள் போதும்வா வென்று
பைம்பொனுர் பாதநீ யென்று தருவாயே
மண்கொளா தாகவே துன்றும்
எண்குசேர் தானையோ டுந்தி
மஞ்சுபோ னீடுகோ தண்ட மதுகோலி
....
....
....
யெண்கொளா வீரர்போய் முந்து
தந்திபோ யேறுதே ரின்றி
யின்சொல்போய் ஆண்மைபோய் நின்ற நிலைகாணு
வென்செய்வாய் வாடினுய் விஞ்சு
வஞ்சகா ராவணு அஞ்சல்
இன்றுபோய் நாளைவா வென்ற பெருமாளே. (30)

மடுவின் மூல மென்ற மாக ரிக்கும்
இனிய சூரி யன்கு மார னுக்கும்
வடிவு காண வந்து ராஜ பக்ஷி மிசையேறி
மறுவி லாது யர்ந்த வீட ளித்த
கருணை நீர்மை நம்பி னேனெ னக்கு
மருவு தேவ ரிங்கு வேறொ ருத்தர் பிடியாதுன்
அடிய னேன்மு னிந்து வேறு கட்டி
விடுவ ரேனு நின்க்ரு பாதி ருட்டி
அரிய தேனு நின்ற தேவர் பற்றி யவர்யாரும்
அழிவு பேசி நெஞ்சு தானி ளைக்க
நகுவ ரேனு மென்ற னேழ்பி றப்புப்
அரியி ராம வென்று பாடு மிச்சை ஒழியேனே

முடுகி யேயெ திர்ந்த தோர்க ளத்தில்
நிருதர் கோன்வெ றுங்கை யாலி ளைத்து
முகமெ டாது சிந்தை நாண முற்று மதயானை
முனைசெய் கோட ரிந்து மார்பு கட்டு
நெடிய வீர மன்று தாழ்வு பட்டு
முறைசெய் வாரு மின்றி யேத வித்து வரமாக
உடைய தோர்சி வன்கை வாளும் விட்டு
மலையை வேரி டந்த தோளும் வெட்கி
உயர்கி ரீட பந்தி போய்வி ரித்த தலையேயாய்
உரிய நூல்வி ளம்பு நாவு மற்று
வெருவி யேயி லங்கை மாந கர்க்குள்
ஒருவ னேந டந்து போக விட்ட பெருமாளே. (31)

கானடை கோடு காயு முண்டு
வானிடை யேகி நீரு முண்டு
காய்பசி தாக மாறு முந்தும் உடைவேறென்
காணிய கோவ ணாதி யுண்டு
நீள்புற வாசல் கூடு முண்டு
காவலும் வீடு மேனு றங்கல் அவமீதில்
ஆனதொர் போது போது மெங்கள்
வாழ்சட கோப னார்மொ ழிந்த
ஆயிர வேத மாலை கொண்டு திசைமாறி
ஆதவ னேடி னாலென் விஞ்சு
மாமனு நீதி கோணி யொன்ற
தாகிலென் வீணர் போன்மெ லிந்து தளரேனே
மாநிரு தேச னார்பு குந்து
தூதரை யேவி வேறி ருந்த
மாபல சேனை தாரு மென்று ரணமீதே
மாலிய வான்மு னேமொ ழிந்த
நீதிபொ ருமலேபு ழுங்கி
மாதுலன் வாய்மை பேணி யெம்பி துயின்மாறத்

தானினி வேணு நீர்கொ ணர்ந்து
வாருமெ னுமுன் வீரர் சென்று
தாடையின் மோத வேயெ ழுந்து முதல்வாநீ
தாயைவி டாய்கெ டாம லென்ற
கூறிய போது சீறல் கண்டு
சார்பிலி கால னாகி நின்ற பெருமானே. (32)

கூறிய புனல்க ளவைப டிந்து
பேர்புனை தரும வகைபு ரிந்து
கோதறு நிதிகள் பலவ ழங்கி இருபோதுங்
கூடிய வயினி யுடன யின்று
வேள்வியின் வகைகள் பலமு யன்று
கோதைய ருறவு நனிது றந்து திரிவாரும்

ஏறுவ ரிழிவ ருழல்வ தன்றி
நீடிய செனன மரண தொந்தம்
யாவையு மொழிய வுபரு கின்ற வகைகாணார்
ஈனம துடைய தொழிலி னின்று
நாரண பரம வரிமு குந்த
ராகவ வெனினு மவர்வை குந்தம் அடைவாரே

சீறிய தமைய னடிவ ணங்கி
ஊனொடு நறவு பலநு கர்ந்து
சீரிய வணிகள் பலவ ணிந்தி ரதமே றிச்
சேடனு மெளிய வரவ மிஞ்ச
வானரர் வெருவ மதில்க டந்து
சேவக கருணன் வருதல் கண்டு மலைபோலே

வீறிய தொருவ னிவனெ வன்கொல்
வீடண வுரைசெ யெனவி றைஞ்சி
மேலென தமைய னவன தம்பி யுலகேழும்
மேருவு மனைய நிலைய னென்று
கூறலு மவனை யினிது கொண்டு
நீளுதி யுறவு புரிவ னென்ற பெருமானே. (33)

வாரு டமைந்து பைந்த ரளமணி
மேலே யணிந்து சந்த புழுகுடன்
மாமேள மண்டி மிண்டி யனுதினம் உயர்வாகி
மார்பே நெருங்கி யங்கு விரவிய
தோளே யளந்து பஞ்ச சரபதி
மாவாய் விழுந்த ழுந்த வடிவழும் அடைவேபோய்

ஓரு ருமின்றி யெங்கு நிலைபெற
வேமா றுகண்டு சண்டை யிடுமுலை
யோடே நடந்து ரம்பை யெனவரு மடவார்தம்
ஊனூர் வழும்பு சந்த தழும்விடு
பாழ்வா சலின்க ளின்ப மெனவிடு
லோகீத தொரந்த மென்று தவிர்வது மொழிவாயே

போரு டுசென்று கும்ப கருணனை
மாவீட ணன்ப ணிந்து னடைவுகள்
போரே றுணர்ந்து கொண்டு வருகென அருளானோன்
போதா யிலங்கை யின்று பெறுதிசொல்
மாருகொ ளென்று நின்ற பொழுதெதிர்
பூரே யொர்தம்பி யின்றி முதலவன் அமர்மீதே

நேரே தாணிந்து மங்க லழகல
நானே யெதிர்ந்து முந்த மடிகுவன்
நீபோ யிருந்து பின்பு முறைபுரி எனலோடும்
நீர்மா ரிவந்து கண்கள் சொரிதர
ஊடே திரும்பி நண்ப னுரைசெய
நீள்வாய் மைகண்டு பின்பு பொரவரு பெருமாளே. (34)

அறுகெ ருக்க ணிந்த
சிவனு மற்றை யுந்தி
அயனு மட்டி றந்த வரம்டாவும்
அசுரர் பெற்று கந்து
செலவி டுப்ப ரந்த
அருள்வ ரந்தை யெந்த வகையாலும்

குறைப டக்க ளைந்து
புலவ ரைப்பு ரந்து
குலவி நிற்பை யுன்றன் அருளாலே
குளிர்சி றப்ப மைந்த
வவரை யப்ப ரசண்டர்
கொலைசெ யத்தொ டங்கின் முடியாதே
தெறுக ளத்தில் வந்து
கலிக ளைப்பி சைந்து
திலத மிட்டு நின்று பொருதாலும்
தினவு கெட்ட தென்று
படமி தித்த றைந்து
செறித டக்கை கொண்டு மிகவாரி
முறையி டத்து ரந்து
விழவு தைத்து நுங்கி
முடுகி யிட்ட கும்ப கனனோடே
முதல டர்த்தெ திர்ந்த
வனுமன் வெற்றி கண்டு
முடிது ளக்கி நின்ற பெருமாளே. (35)

வம்ப னிரணிய னொடொரு
சிங்க வுருவொடு மேயினை
வந்து குறளுரு வாகினை ஒருசேனும்
மண்டு கமடமு மாயினை
பன்றி யெனவிளை யாடினை
மங்கை கவினுற லாயினை கழுமீதோர்
தும்பி யெனவெழில் வீறினை
அந்த மறையவ னாயினை
துன்று குழவியொ டோதிம வடிவானாய்
துங்க மிருபரி யாகுவை
யெந்த வடிவுகொ ளாயுன
தொந்த வடிவை யலால்வடி வுளதாமோ

குப்ப கனனொடு மாருதி
மண்டு மமரிடை யேசிலை
கொண்டு தனியிள வீரனும் நிரைவாளி

கொண்ட லெனவிட வேயது
கண்டு விலகுமு னேவரு
குன்று நிகர்கவி ராஜன துயிர்நாடி

வெம்ப விடுமொரு சூலம
தங்கை கொடுநெடு மாருதி
விண்டு துகள்பட மோதனும் எரிசேயை

வென்று சிறையிட வேகொடு
சென்ற பொழுது செலாவகை
வெங்க ணையில்விழ மாறிய பெருமாளே. (36)

*நின்றபெ ரும்புகழ் கொண்டிடு மின்பமும்
மைந்தர்செ றிந்திட வுய்ந்திடு கின்றதும்
நெஞ்சவ லங்கள்க ளைந்திடு புந்தியும் நெடுவாழ்வும்

நிந்தையில் சுந்தர மும்பல வங்களும்
வண்டமிழ் கொண்ட பண்பது நின்சர ?
ணென்று கஞ்சொல விஞ்சிய ? நிலைதானும்

? இந்திரை செங்கணி னன்புறு தஞ்சமும்
அம்புவி மங்கைவி ரும்புறு துங்கமும்
இன்பரி லிங்குள ருன்சர ணங்தொழு மவர்தாமே

என்றுதெ ளிந்தும்வ ணங்குத லின்றிய
கண்டகர் மிண்டர் கரும்புற வஞ்சகர்
இங்கிவர் தங்களை நண்புபு ரிந்திடல் ஒழியாதோ

---

* இடையிடையே சிதைந்தும் பிறழ்ந்தும் உள்ள இது ஏட்டிலுள்ள படியே இங்கு பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

வென்றிகொள் செங்கதிர் மைந்தனை நெஞ்சிடை
கன்றவ றைந்துக டுஞ்சிறை யின்புடை
வெம்பவி டும்படி சிந்தனை கொண்டிரு கையினோடே
வெங்கணி ரண்டுபி துங்கவு டன்கொடு
....
....

குன்றுந டந்தென வந்துபு குந்தெதிர்
நின்றபெ ருங்கவி யின்கிளை கண்டுயிர்
குன்றியி டும்படி தின்றிம லைந்திடு மமருடே
கொண்டபெ ருந்தலை தெண்டிரை யின்புனன்
மண்டிய மூந்தவ ரம்பெறு மன்பொடு
கும்பக னன்பட வம்புது ரந்தருள் பெருமாளே. (37)

காவிரியொ ருத்தி மாமுடிது ளக்கி
மாலையிடு கிற்பள் வானதியொ ருத்தி
காலதுவி ளக்கி மேன்மைபெறு கிற்பள் பிரியாதே
காசினியொ ருத்தி தாளதுபி டிப்பள்
பூமகளொ ருத்தி மார்பினிலி ருப்பள்
காவலன ளித்த மாமயிலொ ருத்தி கலியாணப்

பாவையென நிற்பள் நீள்புதுவை யுற்ற
காரிகையொ ருத்தி சூடியும ளிப்பள்
பாடியுந யப்பள் நாரியர்ந லத்தை அகலாய்நீ
பார்மிசையி லுற்ற தோகையரி டத்தில்
வீழுமெனை மெச்சி டாமன்மதி யற்ற
பாவியென வைத்து நீணரகில் விட்டு விடலாமோ

ராவணர்த மக்கு நேரிளைய துட்ட
னோடுகயி லக்கிரி கூடமது கட்டி
லாடமிசை தைக்க வார்கணைநி றுத்தி யயர்போது
ராசனையெ முப்பி நாசிசெவி பற்றி
மீளவிடு வித்து மேலமர்வி ளைத்து
யானைமுத லுற்ற சேனையையு ழக்கி யவன்மீளத்

தாவிமுனெ டுத்த வாளினைய றுத்து
நீள்புயம றுத்து வேகமொடு மெற்று
தாடனைய றுத்து நீள்வலிகு லைத்து' விளையாடித்
தாழ்வுறும ரக்கன் ஞானமது பெற்று
வீறொடுது திக்க வாளிகொட றுத்த
தாரணிசி ரத்தை வேலையினில் விட்ட பெருமாளே. (38)

சந்தணி பொற்கிரி தானோ வீறுந்
துங்கம ணிக்குட மேயோ வீசுந்
தந்திரெ ருக்கிய கோடே யாகுந் தனபாரம்
சந்தய மற்றிட வோதாய் மாரன்
சிங்கிய டைத்திடு பாவாய் நானுன்
றஞ்சமெ னச்சொலி வீணே மாமங் கையர்மேலே
சிந்தையை வைத்துவி டாதே மால்கொண்
டங்கவ ரெச்சில ருநீர் வாயின்
சிந்துது ளிக்குவி டாய்போ மேயென் றயராதே
சிந்தனை விட்டுல கீரே ழாகும்
தொண்டர டிப்பொடி யாயே யானும்
செங்கண்ம ணிக்கட லூடோர் காலம் படிவேனோ
துந்துமி மத்தளம் வீறே யார்குஞ்
சங்கமி டக்கையி னூடே டூடுண்
டுண்டுடு டுட்டுடு டுடு டுடென் றதிர்போதின்
துண்டமு மற்றவ்வு தாவாய் நீடுங்
கும்பக னப்பெயர் மாறு வீரன்
தொந்த மறத்தெளி வாயே பாதந் தொழவேகண்
டந்தவ ரக்கர்கள் காணு தேவந்
தும்பர்ந கைத்துரை யாடா தேயன்
றந்தமு றத்தலை பாரா வாரந் தனின்மூழ்க
வஞ்சன வெற்பது போலே வீரம்
துன்றுக ளத்திடை வீழா தேநின்
றம்புமு டுக்கிய சீரா மாநம் பெருமாளே. (39)

பூணையு மாக்கி ஞர்கழு
காகமு மாக்கி ஞர்முதிர்
பூசுர ஞக்கி ஞருயி ரதுமாளப்
பூசனு மாக்கி ஞரொரு
நான்முக மாக்கி ஞர்கலை
போன்முக மாக்கி ஞர்கடை படுமாறு
மேனிபு ஞக்கி ஞருடல்
பாதிய தாக்கி ஞரமர்
வேடமு மாக்கி ஞர்முத லிமையோரை
வீடுள வேற்க ஞரிடு
மோகன வாழ்க்கை யானது
மேதினி யோர்க்கெ லாம்விட வசமாமோ
சானகி பார்க்க வேயொரு
பாவையை யேற்க வேயவள்
தாதையி ஞக்கி மோதரன் விறகாலே
தானெதிர் காட்டி மாமயில்
சோர்வுற வீழ்த்தி வேதனை
சார்வுற வார்த்தை யேகொள உயிர்வாடி
மானினி நோக்கி யேயமு
நோயினின் மூர்ச்சை போய்விட
மாயவி ராக்க தேசுரன் இளையோன்முன்
வானுறல் கேட்டு வாய்விட
மேலவர் போற்றி யேதொழ
வானா மார்க்க வேமகிழ் பெருமாளே. (40)

அம்பினி வந்த கூரும்வை
குந்தமுமி ருந்து வாழுவை
பண்டரி விந்த்ர ஞகிவிண் முழுதாள்வை
அம்புவி யின்கண்மேதகு
தொண்டரி றைஞ்சி வாழவ
ரங்கபு யங்க மேவுவை உலகேழும்

பம்புநெ டுஞ்ச ராசர
மெங்குநி றைந்து லாவுவை
பஞ்சவி தங்கள் பேதமை வடிவாகிப்
பண்பொடு நின்றி லாயெனி
லென்படு கின்ற நீடுயிர்
பண்புற டங்கி நீதியி னடவாதே
தம்பியி ழந்த ராவணன்
வெம்புதல் கண்டு வீறொடு
தன்சிறு மைந்த னாகிய அதிகாயன்
தந்தரு ளெந்தை போரென
அன்றுபொ ருந்த வாயிர
சங்கது ரங்க மாரத மிசையேறி
வெம்புநி கும்ப னேடும
கம்பன்ம ருங்கு சூழ்வர
வெங்களம் வந்து சாருமுன் அவனாண்மை
வெந்திற றந்து கூறலி
ளெண்டுயி லின்றி வாழ்பவன்
வென்றியை நின்று கூறிய நமாளே. (41)

[தொடரும்.]

T. K. இராமானுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

*தேசிகமாலை.

மாமலர்மன்னியமங்கை மகிழ்ந்துறை மார்பினன் மறைமுடித் தேசிகன். இவன்தாள் நற்றாள். அத்தாண்மலர் சூடியவன் தொல்லருள் மாறன். இவன் துணையடிக்கீழ் வாழ்வையுகந்தவர் இராமாநுசமுனி. இவர் வண்மைபோற்றும் சீர்மையர் "தூப்புற்பிள்ளை." இவரது பொற்றாமரையடியை என்றும் நினைந்திருப்பார் பாதம் அடியேனது சென்னிதனிற் சூடும் மலர்.

நம்மாழ்வார் அருளிச்செய்த ருக்வேதஸாரமான திருவிருத்தத்தில்,

"நானிலம் வாய்க்கொண்டு நன்னீ ரறமென்று கோதுகொண்ட
வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ் பாலை கடந்தபொன்னே!
கால்நிலந் தோய்ந்து விண்ணோர்தொழும் கண்ணன் வெஃகா வுது அம்பூந்
தேனிளஞ் சோலை அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே"

என்று நகர்காட்டுதுறையாய் அமைந்துள்ளதும், வையமெலாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன் திருநெடுந்தாண்டகத்தில்,

"விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண் காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக வென்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே"

என்று அமைந்துள்ளதும், "திருத்தண்கா" என்றும் "ஹிமோபவநம்" என்றும் போற்றப்பெறும் திவ்யதலத்தில் அவதரித்த "தூப்புல்வள்ளலாரை"க் குறிக்கும் என்று ஆன்றோர் கூறுவர்.

---

* இது, மதுரை ஸ்ரீ வேதாந்ததேசிகபக்தஸபையின் எட்டாம் வருஷோத்ஸவத்தில் நாளிது பிரமாதிஸ்ரீ புரட்டாசிமீ 7உ திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசி ஸ்ரீ ப. வே. திருமலை ஐயங்காரவர்கள் செய்த உபந்யாஸத்தின் சுருக்கம்.

இத் தூப்புல்வந்தசோதி, "வேதாந்ததேசிகர்" என்றும், "கவி தார்க்கிகசிங்கம்" என்றும், "திருவேங்கடநாதன்" என்றும், "தூப்புற்பிள்ளை" என்றும் கொண்டாடப்பெற்றவர்.

"தென்சொற்கடந்தான் வடசொற்கலைக் கெல்லைதேர்ந்தான்" என்ற கம்பநாடர் திருவாக்கு இவருக்கும் பொருந்துமாறு பின்வருமவற்றால் அறியலாம். "உபயவேதாந்ததேசிகர்" என இவரைக் கூறுவர் அழகர்பிள்ளைத்தமிழாசிரியர்.

இச் சந்தமிகுதமிழ்மறையோன் அருளிச்செய்த தேசிகமாலை என்னும் செந்தமிழ்மாலையிற் பொதிந்துள்ள நறுந்தேனை இங்கே சற்றுப் பருகுவோம்.

இப்பரமாசாரியனான வேதாந்தகுரு, தொன்னெறியாகிய நன்னெறிநின்று நம்மை உய்யக்கொள்பவர் என்பது கூறுமலே விளங்கும்.

'செந்தமிழ்மும் மணிக்கோவை செறியச் சேர்த்துப்
பந்துகழல் அம்மானை யூசல் ஏசல்
பரவுநவ மணிமாலை யிவையுஞ் சொன்னேன்
முந்தைமறை மொழியவழி மொழிநீ யென்று
முகுந்தனருள் தந்தபயன் பெற்றேன் நானே'

என இவர் கூறுமாற்றால் இவர் பகவானுடைய நியமனத்தின்பேரிற் கவிபாடினார் என அறியக்கிடக்கின்றது. மேலும் இவர்,

"வெள்ளைப் பரிமுகர் தேசிக ராய்விர காலடியோம்
உள்ளத் தெழுதிய தோலையி விட்டனம் யாமிதற்கென்
கொள்ளத் துணியினுங் கோதென் றிகழினுங் கூர்மதியீர்
எள்ளத் தனையுக வாதிக ழாதென் னெழின்மதியே"

(அதிகாரசங்கிரகம். 56.)

என்றும் கூறுதல் காண்க. இது நிற்க.

கம்பநாட்டாழ்வார் பெரியபெருமாள்விஷயமாக இராமாயணத்தை இயற்றியருளினார். நம் வேதாந்ததேசிகரோ பெரியபெருமாள் திருவடிநிலைகள்விஷயமாய் "ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம்" என்ற க்ரந்தத்தை ஓரிராத்திரிக்குள்ளே நலைக்கட்டியருளினார். உதயமான போது பெருமாள்ஸந்நிதியில் ஸ்வாமிகள் திருவோலக்கமாயிருந்து இப்பாதுகமாமறையின்சீரை வியந்து "கவிதார்க்கிகஸிம்மம்" என்ற திருநாமம் நம் தேசிகருக்கே தகுமென்றார்கள்.

முற்காலத்தில் மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரைச் சென்றடைந்து, தென்றமிழ்த்தொடையில் "கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்ற திருப்பதிகம் ஒன்றே பாடினார். 'மன்றே புகழும் திருவழுந்தூர்வள்ளல்' அதற்கு ஈடாக அப்பதிகம் பத்துள்ளதாக ஒரு நூற்றந்தாதியை அச்சடகோபர்விஷயமாகப் பாடினர். 'துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டுந் தொல்வழியே நல்வழிகள்' என்று துணிவு பூண்ட தூப்புல்வள்ளல், மதுரகவிகள்விஷயமாக, "மதுரகவிஹ்ருதயம்" என்னும் ரஹஸ்யமும், ஆழ்வாரந்தாதிக்குப் பதின்மடங்காக அம் மாறன்விஷயமாக மேற்குறித்த திருப்பாதுகமாமறையும் பாடியருளியுள்ளார். இஃதொன்றே இவர் ஆழ்வாரிடம்கொண்ட ஈடுபாட்டை நன்கு தெளிவிக்கவல்லது.

கல்வியிற் பெரியராய கம்பநாட்டாழ்வார்,

"மூர்த்தத் தினையிம் முழுவே முலகு முழுகுகின்ற
தீர்த்தத் தினைச்செய்ய வேதத் தினைத்திரு மால்பெருமை
பார்த்தற் கருளிய பாரதத் தைப்பணித் தானுநின்ற
வார்த்தைக் குருகைப்பி ரானுங்கண் டானம் மறைப்பொருளே" (41)

என்ற பாடலில் ஸ்ரீவேதவியாசபகவானுங்கண்டான் குருகைப்பிரானுங்கண்டான் என்றார். ஆனால் நம் தேசிகர்,

"மாசின்மனந் தெளிமுனிவர் வகுத்ததெல்லாம்
மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கொவ்வா"

என்று முழங்குகிறார். மாசின்மனத்தெளிமுனிவர் வியாஸாதிகள்;

மானுகந்தவாசிரியர் அவனால் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வாராதிகள். அம்முனிவர் வகுத்ததெல்லாம் இவ்வாசிரியர் வார்த்தைக் கொவ்வாவென்று தாம் பக்ஷபாதத்தாற் கூறவில்லையென்பதை இவர் "வாசியறிந்திவையுரைத்தோம்" என அறுதியிடுகிறார். இவர் ஒருவரே இவ்விதம் அழுத்தமாகக் கூறவல்லவர்.

மேலும், ஆழ்வார்கள் மகிழ்ந்துபாடுஞ் செய்ய தமிழ்மாலைகளை நன்கு அத்யயனஞ் செய்யவேண்டும் என்றும் அவ்வாறு செய்யின் பழமறையின் மறைபொருளெல்லாம் செவ்வனே விளங்கிக் கற்போருக்குத் தெள்ளியஞானம் உண்டாகும் என்றும் இவர் கூறுகின்றார்.

"மங்கையர்கோ னென்றிவர்கள் மகிழ்ந்துபாடுஞ்
செய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே"

(அதிகாரசங்கிரகம்—1.)

என்பது நோக்குக.

தயாசதகத்தில் பராசரர் முதலிய முனிவர்களுக்கு வணக்கங் கூறுமுன் இவர் ஆழ்வார்களைத்தொழுகிறார்.

இங்ஙனம் முற்படக்கூறியதினின்று இவருக்கு ஆழ்வார்களிடமுள்ள பேரபிமானம் வெளிப்படை. ஆழ்வார்கள் பகவானுடைய தயையையே மோக்ஷோபாயமாகக் கைப்பற்றிய சரணாகதிநிஷ்டர்; திருவாய்மொழி முதலிய பொய்யில்பாடல்கள் தீர்க்க சரணாகதியாகும்; பகவானுடைய அருட்குணத்தையே ஆழ்வார்கள் விசேஷமாகப் பிரகாசப்படுத்துபவர்கள். பராசரர்போன்ற புராணகவிகள் பக்திநிஷ்டர்; தயாகுணத்தோடு வீரியம் முதலிய குணங்களையுங் கொண்டாடுபவர்கள்.

இவர் அருளிச்செய்த ரஹஸ்ய க்ரந்தங்களுள் 'ப்ரதானசதகம்' என்பதும் ஒன்று. இதில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தார்த்தங்களில் பிரதானமான நூறு அர்த்தங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் இதிகாஸ புராணங்களிற் பிரதானமானவற்றைக் கூறுமிடத்து,

"இவ்வர்த்தத்தைச் சித்தாஞ்ஜநத்தோடே ஸர்வரையும் எளிதாகத் தெளிவிக்குமவற்றில் தொண்டர்க்கமுதுண்ணலாய்ப் பொய்யில் பாடலான ஆழ்வார்கள் அருளிச்செயல் ப்ரதாநம் (38)......... இதிஹாஸங்களில் ஸ்ரீமத்ராமாயணம் ப்ரதாநம். (39)" என அறிவிக்கின்றார். மேலும்,

"மந்திரமும் மந்திரத்தின் வழியுங் காட்டி
வழிப்படுத்தி வானேற்றி யடிமைகொள்ளத்
தந்தையென நின்றதனித் திருமால் தாளில்
தலைவைத்தோம் சடகோப னருளி னாலே"

(அமிருதாசுவாதிநி 28.)

என்பதில் வியக்தமாக எம்பெருமான்திருவடி நம்தலைமிசையே பொருந்துமாறுசெய்வது நம்மாழ்வாரருள் என்கிறார். ['எண்குணத்தான் தாளை வணங்காத் தலை' பயனில்லை என்பது வள்ளுவர்வாக்கு.]

தாமியற்றியருளிய "பிரபந்தஸாரம்" என்ற தேசிகமாலைப் பாசுரமாகிய,

"அந்தமிலா வாரணங்கள் நாலாய்நின்ற
வதன்கருத்தை யாழ்வார்க ளாய்ந்தெடுத்துச்
செந்தமிழா லருள்செய்த வகைதொகையுஞ்
சிந்தாம லுலகங்கள் வாழவென்று
சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல்தோன்றும்
வேதாந்த குருமொழிந்த பிரபந்தசாரம்
சிந்தையினு லனுதினமுஞ் சிந்திப்போர்க்குச்
சேமமதாந் திருமாறன் கருணையாலே" (18)

என்பதில் இவர் கூறியுள்ளவை நன்கு அறியப்படல்வேண்டும்.

"மாறனில்மிக்கும் ஓர் தேவும் உளதே?' என்றது ஆழ்வார் பண்ணிப்பு. "திருமாறன் கருணை" என்றது மாறனுக்கும் மாலுக்கும் ஒக்க வமைந்தது, இவரது கவித்திறனும் ஆழ்வார்விஷயமான பக்தி மிகுதியுமாம்.

"பாவகத் தாற்றன் றிருவவ தாரம் பதினொன் றென்றிப்
பூவகத் தாறி யாதவண் ணந்தன்னை யேபுகழ்ந்து
நாவகத் தாற்கவி யாயிரம் பாடி நடித்தளித்த
கோவகத் தாற்கன்றி யென்புறத் தார்செய்குற் றேவல்களே"

என்ற சடகோபரந்தாதிப்பாடலாலும்,

"சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கு
முளவோ பெருமா னுனக்கு"

என்ற தனிப்பாடலாலும், எம்பெருமானே ஆழ்வாராகவந்து அவதரித்தான் என்று அறியப்பெறுகின்றது.

"ஸர்வலோகத்துக்கும் பரமாசார்யனான ஸர்வேசுவரன்........ பராங்குசபரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக வொரு தசாவதாரம் பண்ணி மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக வுமிழுமாபோலே வேதார்த்தங்களில் வேண்டும் ஸார தமாம்சத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக்காட்டியும்.......'பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து' என்றுஞ் சொல்லுகிறபடியே அகஸ்த்யஸேவிதமான தேசத்திலே அநேக தேசிகாபதேசத்தாலே யவதரித்தருளினான்" என்பது நம் தேசிகனின் திருவாக்கு. ஆழ்வார்களவதாரத்தை எம்பெருமானுடைய அபிநவதசாவதாரம் என நிரூபித்தவர் இக் கவிவாதிசிங்கமே. இதனாலும் இவரது ஆழ்வார்கள்விஷயமான பக்தி வெளிப்படை.

ஆழ்வார்களுள் நம்மாழ்வாருடைய அபாரசக்தியையும் வள்ளன்மையையும் வெளியிடுங்கால், கம்பநாடர், அம்மகான்,

(1) "இழைத்தாரொருவருமில்லா மறைகளை யின்றமிழாற் குழைத்தார்;"

(2) "குருகையிற் கூட்டங்கொண்டார்;"

(3) "குமரித்துறைவர்;"

என முற்கூறி, அவர், தன்னை,

(1) "வானின்வரம்பிடைநின்று மழைத்தார்தடக்கைகளால் அழைத்தார்"

(2) "அறிவுந்தந்தார்"

எனப் பிறகூறி,

"அங்கும்போய் அவர்க்கு ஆட்செய்வனே" என்று பாரிக்கிறார்.

"குருகையில்வந்து கொழுப்படக்கிய குலபதி" என நம்மாழ்வாரைக் கொண்டாடுகிறார் தூப்புனகர்வள்ளல்.

மேலும், பரமபதஸோபாநத்தில் இச்செந்தமிழ்ச்செல்வர்,

"பூவளருந்திரு மாது புணர்ந்தநம் புண்ணியனார்
தாவளமான தனித்திவஞ் சேர்ந்து தமருடனே
நாவளரும்பெரு நான்மறை யோதிய கீதமெல்லாம்
பாவளருந்தமிழ்ப் பல்லாண் டிசையுடன் பாடுவமே" (18)

என்றும்'

"மாளாத வினையனைத்தும் மாள நாம்போய்
வானேறி மலர்மகளார்க் கன்பு பூணுந்
தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு
தொழுதுகந்து தோத்திரங்கள் பாடி யாடிக்
கேளாத பழமறையின் கீதங் கேட்டுக்
கிடையாத பேரின்பம் பெறுக நாளும்
மீளாத பேரடிமைக் கன்பு பெற்றோம்
மேதினியி லிருக்கின்றோம் விதியி னாலே" (21)

என்றும் குதூகலத்துடன் கூறி மகிழ்கின்றார்.

மேலும்,பாணநாதன் பாடிய அமலனாதிபிரான் பத்துப்பாட்டும்,

(1) "வேதியர்தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம் விதையாகும்"

(2) "நீதியறியாத நிலையறிவார்க்கெல்லாம் நிலை"

(3) "பழமறையின்பொருள்"

(4) "பாவளருந் தமிழ்மறையின்பயனேகொண்ட பாடல்"

என்று கூறி, முற்றுவிக்கிறார், தமது அரிய வியாக்கியானமாகிய "முநிவாஹநபோகம்" என்ற பேருரையை இச்செந்தமிழ்ச்செல்வர்

மற்றையாழ்வார்களுடைய அருளிச்செயல்களையும் இத்தூப் புல்வள்ளல் பாராட்டிச்செல்லும் இடங்கள் பல. அவையெல்லாம் இங்கு விரிக்கிற் பெருகும்.

இவர் "கண்ணிநுண்சிறுத்தாம்பின்" சங்கதியை,

"இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும் பேற்றில்
இகழாத பல்லுறவி லிராக மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக் கத்தில்
தத்துவத்தை யுணர்த்துதலிற் றன்மை யாக்கில்"

என்ற ஈரடிகளில் ஒவ்வொரு பாசுரத்தின்கருத்தை ஒவ்வொரு பதத்தாற் சுட்டிக்காட்டியுள்ளார். இங்ஙனம் பாடுதல் அருமையினும் அருமையே.

சாரீரகசாஸ்த்ரத்தைச் செவ்வனே பரவச்செய்த ஸ்ரீபாஷ்ய காரரைக்குறித்துத் தூப்புற்குலமணி,

"ஆரண நூல்வழிச் செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர்
வாரண மாயவர் வாதக் கதலிகள் மாய்த்தபிரான்
ஏரணி கீர்த்தி யிராமாநுசமுனி" (அதிகாரசங்கிரகம்—4.)

"காசினிமேல் வாதியரை வென்றரங்கர்
கதியாக வாழ்ந்தருளு மெதிராசா" (பிரபந்தசாரம்—14.)

"முத்திதரு மெதிராசர்" (ஷை 16.)

"பிரான்-இடைப்பிள்ளையாகி யுரைத்ததுரைக்கு மெதிவரானர்"
(பரமபதஸோபாநம்—1.)

என்று கொண்டாடுவர்.

தமிழ்நாட்டின் வடவெல்லையான திருவேங்கடத்தைக்குறித்துச் சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான், ஒரு தீங்கவி பாடியுள்ளார். அதில் அவ்வேங்கடவெற்பின்பெருமை நன்குணர்த்தப்பெறுகின்றது.

"கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்பு
கடுவினைய ரிருவினையுங் கடியும் வெற்பு
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும் வெற்பு
பொன்னுலகிற் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும் வேத வெற்பே."

என அமைத்துப் பாசுரமிட்டதின் அழகு எம்போல்பவரால் நன்கு எடுத்துரைக்கற்பாலதன்று. இத்தமிழ்ச்செல்வர்க்கு முன்னர்த் திகழ்ந்த பரமகவிகள் இத்திருமலையைக்குறித்துப் பாடியவனைத்தையும் உட்கொண்டு சுருங்கக்கூறி விளங்கவைக்கும் பெருமிதத்துடன் திகழ்ந்துநிற்பது இத்திருப்பாசுரம்.

நாமங்கைநாதனான அயன், அரவணைமேல்வீற்றிருக்கும் அம்மான் தேவிமார்களுடனே எழுந்தருளியநிலையை அநுபவித்ததைக் கூறுமுகத்தால் வேதாந்தாசாரியர்,

"பெடையி ரண்டையொ ரனமடைந்து
பிரிந்தி டாவகை பேசலாம்
பெருகு மருவிக ளருகு மருவிய
பெரிய மணிவரை பயிலலாம்
பிடியி ரண்டொடு களப மொன்று
பிணைந்த பேரழ கோதலாம்
பிரிவி லொளியொடு நிழலு மருகுறு
மிரவி யிலகுதல் பரவலாம்
கொடியி ரண்டொடு விடவி யொன்று
குளிர்ந்த வாறு குலாவலாம்
குறைவில் சுருதியு நினைவு மிலகிய
தரும வருநிலை யென்னலாம்
அடியி ரண்டையு மடையு மன்ப
ரறிந்த பேரரு ளாளனார்
அணுகு மலர்மக ளவனி மகளொடு
கரடி கிரிநிலை கவர்தலே" (அத்திகிரிமான்மியம். 21.)

என அருளிச்செய்துள்ளபெற்றி கண்டு களிக்கத்தக்கது.

ஆசிரிய வண்ணவிருத்தத்தில் இவர் அருளிச்செய்த எம்பெருமானுடைய சீர்பாதச்சிறப்பு மிகவும் அழகுடைத்து.

உறுசகட முடையவொரு காலுற் றுணர்ந்தன
உடன்மருத முடையவொரு போதிற் றவழ்ந்தன
உறிதடவு மளவிலுர லூடுற்று நின்றன
உறுநெறியோர் தருமன்விடு தூதுக் குகந்தன
மறநெறியர் முறியபிரு தானத் துவந்தன
மலர்மகள்கை வருடமலர் போதிற் சிவந்தன
மறுபிறவி யறுமுனிவர் மாலுக் கிசைந்தன
மநுமுறையில் வருவதொர் விமானத் துறைந்தன
அறமுடைய விசயனமர் தேரில் திகழ்ந்தன
அடலுரக படமடிய வாடிக் கடிந்தன
அறுசமய மறிவரிய தானத் தமர்ந்தன
வணிகுருகை நகர்முனிவர் நாவுக் கமைந்தன
வெறியுடைய துளவமலர் வீறுக் கணிந்தன
விழுகரியோர் குமரனென மேவிச் சிறந்தன
விறலசுரர் படையடைய வீயத் தொடங்கின
விடலரியபெரியபெருமாள்மெய்ப்பதங்களே. (அதிகாரசங்கிரகம்.51,)

மேலும், நம் கவிவாதிசிங்கம் "நவரத்நமாலை"யில்,

ஒருமதி யன்ப ருளங்கவர்ந்தன
உலக மடங்க வளர்ந்தளந்தன
ஒருசடை யொன்றிய கங்கைதந்தன
உரக படங்க ளரங்குகொண்டன
தரும முயர்ந்ததி தென்னநின்றன
தரும னிரந்த திசைந்துசென்றன
சகட முடைந்து கலங்கவென்றன
தமர்க ளருந்து மருந்திதென்பன
திருமகள் செய்ய கரங்களொன்றின
திகழ்துள வுந்து மணங்கமழ்ந்தன
செழுமணி கொண்ட சிலம்பிலங்கின
சிலைதனி லன்றெ ரணங்குமிழ்ந்தன
அருமறை யந்த மமர்ந்தபண்பின
அயன்முடி தன்னி லமர்ந்துயர்ந்தன
அருள்தர வெண்ணி யயிக்தைவந்தன
அடியவர் மெய்யர் மலர்ப்பதங்களே.

என்று அருளிச்செய்த ஆசிரியச் சந்தவிருத்தமும் நோக்கத்தகும்.

பகவானின் அருட்பெருக்கையும் அவன் தன்னை வரித்திட்ட விவரத்தையும் ஒரு திருப்பாசுரத்திலமைத்துள்ளார் திருவேங்கட நாதரென்னும் இக்குருமாமணி. அச்செஞ்சொற்கவி வருமாறு:—

"ஊன்தந்து நிலைநின்ற வுயிருந் தந்தோர்
உயிராகி யுள்ளொளியோ டுறைந்த நாதன்
தான்தந்த வின்னுயிரை யெனதென் றுமல்
நல்லறிவுந் தந்தகலா நலமுந் தந்து
தான்தந்த நல்வழியால் தாழ்ந்த வென்னைத்
தன்தனக்கே பரமாகத் தானே யெண்ணி
வான்தந்து மலரடியுந் தந்து வானோர்
வாழ்ச்சிதர மன்னருளால் வரித்திட்டானே" (அமிருதாஸ்வாதினி.32.)

பிராட்டியையும் பெருமானையும் சேர்த்தநுபவிக்குங்கால்,

"போதமருந் திருமாதுட னின்ற புராணன்" (அதிகாரசங்கிரகம். 13.)

"திருவுட னமர்ந்த தெய்வநாயகன்" (மும்மணிக்கோவை. 4)

"அருமறை யுச்சியி லாதரித் தோது மரும்பிரமம்
திருமகளோடு வருந் திருமால்" (கீதார்த்தசங்கிரகம். 1.)

"திருமகளார் பிரியாத் திருமால்" (த்வயச்சுருக்கு. 8.)

"திரு வுரையாய்த் தாம் பொருளாய்நிற்பார்" (திருச்சின்னமாலை. 2.)

"மலர்மகள் மருவிய மறுவுடை யிறையவர்" (ஸ்ரீவைஷ்ணவதினசரி. 3.)

"தன்திருமாதுடனே தனியரசா யுறைகின்ற" அர்த்தபஞ்சகம். 10.)

"பூவளருந் திருமாது புணர்ந்த நம்புண்ணியன்"
(பரமபதஸோபானம். 18.)

"திருமகளோ டொருகாலும் பிரியா நாதன்" (அமிருதாஸ்வாதினி. 7.)

"போதமரும் பேராயிரமுந் திருவும் பிரியாத நாராயணன்"
(அமிருதாஸ்வாதினி. 31.)

என்று வாயாரவாழ்த்துவர் இவ்வள்ளலார்.

"ஸ்ரீ" என்பது பெரியபிராட்டியின் திருநாமம். இச்சப்தத்துக்கு ஆறுபொருள் உண்டு. அதனை நம் தூப்புல்வந்தசோதி,

"அருவுரு வானவை தன்னை யடைந்திடத் தானடைந்து
வெருவுரை கேட்டவை கேட்பித் தகற்றும் வினைவிலக்கி
இருதலை யன்புத ளுலெம்மை யின்னடி சேர்த்தருளும்
திருவுட னேதிகழ் வார்சிறந் தாரெங்கள் சிந்தையுள்ளே"

(த்வயச்சுருக்கு. 2.)

என்ற திருப்பாசுரத்தில் பொதிந்துவைத்துள்ளார். பிராட்டியைக் குறித்து,

"............... தெய்வ நாயகநின்
அருளெனுஞ் சீரோ ரரிவை யானதென
விருள்செக வெமகலோ ரின்னெளி விளக்காய்
மணிவரை யன்ன நின்திரு வுருவில்
அணியம ராக மலங்கலா யிலங்கி
நின்படிக் கெல்லாந் தன்படி யேற்க
அன்புட னின்னொ டவதரித் தருளி
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்
தீண்டிய வினைகள் மாண்டிட முயன்று
தன்னடி சேர்ந்த தமருனை யணுக
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் திருவே"

என மும்மணிக்கோவையைத் தொடங்குகிறார் இவர்.

கரிகிரிமேனின் றனைத்தையுங் காக்கின்ற கண்ணனுக்கு ஆபரணங்களாக அமைந்துள்ள தத்துவங்களை,

"புருடன்மணி வரமாகப் பொன்று மூலப்
பிரகிருதி மறுவாக மான்றண் டாகத்
தெருள்மருள் வாள் மறைவாக வாங்கா ரங்கள்
சார்ங்கஞ்சங் காகமனந் திகிரி யாக
இருடிகங்க ளீரைந்துஞ் சரங்க ளாக
விருபூத மாலைவன மாலை யாகக்
கருடனுரு வாமறையின் பொருளாங் கண்ணன்
கரிகிரிமே னின்றனைத்துங் காக்கின் றானே"

(அதிகாரசங்கிரகம். 41.)

என்ற திருப்பாசுரத்தில் விளக்கியுள்ளார்.

திருநாரணன் திருவவதாரங்களுள் முக்கியமான தசாவதார வைபவத்தை,

"மீனோ டாமை கேழல்கோ ளரியாய்
வானூர் குறளாய் மழுப்படை முனியாய்ப்
பின்னு மிராம ரிருவராய்ப் பாரில்
துன்னிய பரந்தீர் துவரைமன் னனுமாய்க்
கலிதவிர்த் தளிக்குங் கற்கியாய் மற்றும்
மலிவதற் கென்று வல்வினை மாற்ற
நானா வுருவங் கொண்டுநல் லடியோர்
வாழ ரின்ப மிங்குற வருதி" (மும்மணிக்கோவை. 4.)

எனப் பகர்வர்.

இத்தமிழ்ச்செல்வரின் கவித்திறனைக் காட்டவல்ல ஒப்பற்ற உவமைகள் சில காட்டப்படும்.

"உயிருமுட லு முடலாகவோங்கித்
துயிர்வெண்ணெய் தாரணியோ டுண்டான்—பயிரிற்
களைபோ லசுரரைக் காய்ந்தான்றன் கையில்
வளைபோலெம் மாசிரியர் வாக்கு" (அமிருதாஞ்சநி, 5.)

"முள்ளோர்ந்த வாதியர் முன்னே வரிலெங்கள் முக்கியர்பால்
வெள்ளத் திடையில் நரிபோல் விழிக்கின்ற வீணர்களே" (ஷை, 21)

"காக்குங் கருத்துடைத் தேசிகர் கன்றென நம்மையெண்ணிச்
சுரக்குஞ் சுரபிகள்போற் சொரிகின்றனர் சொல்லமுதே"
(அமிருதாசுவாதிநி. 14.)

"பொங்குபுன லாறுகளிற் புவன மெல்லாம்
பொன்கழலா லளந்தவன்றன் தாளால் வந்த
கங்கையெனு நதிபோலக் கடல்க ளேழிற்
கமலைபிறந் தவனுகந்த கடலே போலச்
சங்குகளி லவனேந்துஞ் சங்கே போலத்
தாரிலவன் தண்டுளவத் தாரே போல
எங்கள்குல பதிகளிவை மேலா மென்றே
எண்ணியநல் வார்த்தைகள்நா மிசைகின் றோமே" (ஷை, 25.)

"தேன்பட்ட விடம்போலத் தித்திக் கின்ற
சிறுபயனே யுறுபயனென் றழுந்துமாறும்" (பரமபதஸோபாநம்.5)

"உறையிட்ட வாளென வூனுள் ளுறைகின்ற யோகி" (ஷை, 12.)

"அடலுரக முண்டுமிழ்ந்த வருக்கன் போல
வழுக்கடைந்து கழுவியநற் றாளம் போலக்
கடலொழுகிக் கரைசேர்ந்த கலமே போலக்
காட்டுத்தீ கலந்தொழிந்த களிறே போல
மடல்கவரும் மயல்கழிந்த மாதர் போல
வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றார் போல
உடல்முதலா வுயிர்மறைக்கு மாயை நீங்கி
யுயர்ந்தபத மேறியுணர்ந் தொன்றினோமே"   (ஷை, 19.)

"கனைகடல்போ லொருநீராஞ் சூத்தி ரத்தைக்
கவந்தனையு மிராகுவையும் போலக் கண்டு" (பரமதபங்கம். 35.)

"எத்திசையு முழன்றோடி யிளைத்துவிழுங் காகம்போல்"
(அடைக்கலப்பத்து 1.)

இன்னும் இதை விரிக்கிற் பெருகும்.

இச்செந்தமிழ்ச்செல்வரின் வேண்டற்பாசுரத்தைத் தந்து இக்கட்டுரையை முடிப்போம்.

"மஞ்சுலாவு சோலைசூழ யிந்தைமன்னு மன்னுசீர்
வரையெடுத்து நிரையளித்த மாசில் வாசுதேவனே!
செஞ்சொலன்பர் சிந்தைகொண்டு தீதிலாத தூதனாய்த்
தேருமூர்ந்து தேசுயர்ந்த செல்வதெய்வ நாயகா!
வெஞ்சொலாளர் காலதூதர் வீசுபாசம் வந்தென்மேல்
விழுந்தழுந்தி யானயர்ந்து வீழ்வதற்கு முன்னநீ
அஞ்சலஞ்ச லஞ்சலென் றளிக்கவேண்டு மச்சுதா!
அடியவர்க்கு மருளியக்கு மடியவர்க்கு மெய்யனே."

(நவரத்நமாலை. 8.)

தேசிகமாலையைத் தேசமெங்கும் பரவச்செய்வதே தேசிகபக்தர்களின் முதற்கடமையாகும். வாழ்க செந்தமிழ். வாழ்க தேசிகமாலை. வாழ்க தேசிகன். வாழ்க உலகெல்லாம்.

பிழையும் திருத்தமும்.

செந்தமிழ்த் தொகுதி-௩௯ (பகுதி-௧௧)ல் ௪௪௩-ஆம் பக்கத்து 2, 3 வரிகளில் தீமுச்செறியும் என்றிருப்பதை, தீழுச்செறியும் எனவும், அப்பக்கத்து 22-ஆம் வரியில் சிறுவல்லினின்று என்றிருப்பதை, சிறுவில்லினின்று எனவும், ௪௪௯-ஆம் பக்கத்து 8-ஆம் வரியில் வெல்வவென்து என்றிருப்பதை வெல்வவென்று எனவும், ௪௯௫-ஆம் பக்கத்து 8-ஆம் வரியில் ஓருங்குடைய என்றிருப்பதை ஒருங்குடைய எனவும், ௪௯௭-ஆம் பக்கத்து 25-ஆம் வரியில் கேவியென்ன என்றிருப்பதை, செவியென்ன எனவும் திருத்திப் படித்துக் கொள்க.

மதிப்புரை.

களவியல் என்னும் இறையனாரகப்பொருள் மூலமும் நக்கீரனார் உரையும்:—இது, சென்னை வேப்பேரி பவாநந்தர்கழகத்தாரால் வெளியிடப்பெற்றது; சூத்திரம், உரை, மேற்கோள் முதலியன தெளிவாய் அறியுமாறு வெவ்வேறுவகையான எழுத்துக்களால் நல்ல காகிதத்தில் பதிக்கப்பெற்றது. பிரதிபேதங்களின் வேறு பாடங்களும் அருந்தொடர்களுக்குப் பொருள்களும் கீழ்க்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளன. மேற்கோள் இலக்கியக்குறிப்புரையும், இந்நூலிற் பயின்றுள்ள உவமைகளும், அரும்பதமுதலியவற்றின் அகராதியும், சூத்திர முதற்குறிப்பகராதியும், மேற்கோள் முதற்குறிப்பகராதியும் எழுதிச்சேர்த்திருப்பது இப்பதிப்பைச் சிறப்பித்துக்காட்டுகிறது. செவ்விய தமிழ்நடைபயில்வார்க்கும் செந்தமிழின்பம் நுகர்வார்க்கும் இன்றியமையாத இந்நூலைத் திருந்தியமுறையிற் பதிப்பித்து வெளியிட்ட பவாநந்தர்கழகத்தார்க்கு உயர்தனித்தமிழ் கற்போர் நன்றிபாராட்டற்பாலராவர். வேண்டுவோர் பவாநந்தர் கழகம், நியூடன்ஹௌஸ், சர்ச்ரோடு, வேப்பேரி, சென்னை: என்ற விலாசத்திற்கு எழுதி விலைமுதலியவிவரம் தெரிந்துகொள்க.

திருக்குறள் நாட்குறிப்பு:—இது தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரால் வெளியிடப்பெற்றுவரும் கைக்குறிப்புப்புத்தகம். இதில், 1940-ஆம் ௵ ஜனவரி௴ 1௳ தொடங்கி டிசம்பர் 31௳ வரையுள்ள ஒரு வருடப்பஞ்சாங்கம், துலுக்கு இங்கிலீஷ் தமிழ் மாதத் தேதி கிழமை திதி நக்ஷத்திரங்களும் அற்றைநாள் விசேடங்களும் ஒவ்வொருமாதத்திலுமுள்ள நவக்கோள்நிலைகளும் மற்றும் உலகவழக்கில் போக்குவரத்துக்குரியவாயறியவேண்டியவைகளும் தெரிந்துகொள்ளும்படி தெளிவாயெழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளன. நாட்குறிப்புக்குரிய ஒவ்வொரு பக்கத்திலும் தலைப்பில் ஒரு திருக்குறளும் அதன் கருத்துரையும் பதிக்கப்பெற்றுள்ளன. அவை தமிழ்பயிலாதவருக்கும் திருக்குறட் பயிற்சிக்கு விதையூன்றியதுபோல் விளங்குகின்றன. இப்புத்தகம் நாட்குறிப்புக்குப் பயன்படுவதோடு மற்றும் பல உலகவழக்கங்களையும் உணர்ந்துகொள்வதற்கு உதவியாயுள்ளது. இதன்விலை அணா ஐந்து. பென்சிலுடன் அணா ஆறு. வேண்டுவோர், திருநெல்வேலியிற் கீழரதவீதியிலுள்ள தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத்தில் அல்லது சென்னையில் பவழக்காரத்தெரு 6நெ. கட்டடத்தில் உள்ள ஷெ கழகத்தின் காரியாலயத்தில் பெறலாம்.